



## எம் கோள்!

*அடிமை அறியாமை உட்பகைமை ஆழ்ந்த*
*மடிமை பொசுக்கி மணித்தமிழும் நாடும்*
*குடியும் உயர்த்தலெம் கோள்!*

**– பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

சுவடி : 3 தி.ஆ. 2057 விடை (மே – 2026) ஓலை – 1

# புதிய ஆட்சியாளர்க்குச் சிலசொல்!

தமிழ்நாட்டின் 17–ஆம் சட்டப்பேரவைக்குத் தேர்தல்கள் முடிந்தன. தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றிபெற்று அதிக இடங்களில் வெற்றி பெற்ற கட்சியாக வந்தாலும், ஆட்சியமைக்க 118 சட்டப்பேரவை உறுப்பினர்களின் துணைதரவு தேவைப்பட்டது. முதலில் இந்தியப் பேராயக் கட்சி த.வெ.க.வுடன் கூட்டு சேர்ந்தது. பல்வேறு நிகழ்வுக் காட்சிகளுக்குப் பிறகு, பொதுவுடைமைக் கட்சிகள் இரண்டு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய ஒன்றிய முசுலிம் கூட்டமைப்பு (IUML) ஆகிய நான்கு கட்சிகளும் த.வெ.கவுக்கு துணைதருவதாக ஒப்புதல் மடல்கள் தந்தன. அதனால் மொத்தமாக 120 உறுப்பினர்கள் துணைதரவோடு 10 ‘மே’ 2026–இல் த.வெ.க. தலைவர் திரு.விசய் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார். அவருடன் தொண்டு (ஒன்பது) பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர்.

புதிய ஆட்சியாளர்க்கு ‘நற்றமிழ்’ முதலில் மனமார்ந்த வாழ்த்தைத் தெரிவிக்கின்றது. அடுத்து, தமிழ், தமிழர் நலன்களுக்காக அடிப்படையாகச் சிலவற்றையும், பொதுவாகச் சிலவற்றையும் கூறுவதை ‘நற்றமிழ்’ தன் இன்றியமையாக் கடமையாகக் கருதுகின்றது.

தமிழினம் மூத்த தொன்மையான இனம்; பண்பாடு நாகரிகங்களில் சிறந்து விளங்கிய இனம். தமிழ்மொழி அவ்வினத்தின்

அடையாளம் என்பது மட்டுமன்றி உலகின் மூத்தமொழி; உலகின் மூத்த தாய்மொழி. பல மொழிகளுக்குத் தாய். தமிழைத் தம்உயிருக்கு நேராகத் தமிழர் போற்றிவருகின்றனர் என்பதுஉண்மை என்றாலும் இதுவரை தமிழுக்கு உண்மையான காப்பும் உண்மையான ஆக்கமும் ஊக்கமும் உயர்வும் இல்லை என்பதே உண்மையாகும்.

த.வெ.க.வின் முழுத் தேர்தல்அறிக்கையில் தமிழ்மொழி பற்றிய எந்த அறிவிப்பும் இல்லை. அரசியலுக்குப் புதியவர்கள் தமிழைப்பற்றிக் குறிப்பிட மறந்திருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. த.வெ.க.வின் தலைவர் சிறந்த நடிகராகத் திகழ்ந்தவர். அந்தத் தகுதியே அவருக்கு ஆட்சிக்கட்டிலேறத் தக்கத்தகுதியாகத் தமிழ்நாட்டுமக்களில் பலராலும் பார்க்கப் பட்டிருக்கின்றது என்றால் மிகையில்லை; உண்மையே. ஆண்டவர்களின் மேலிருந்த வெறுப்பால், வேறு மாற்றுஇன்மையால் அல்லது மாற்று என்ன என்பதறியாமல் தேர்ந்தெடுத்தார்கள் என்று கூறினாலும் பொருந்தும். எப்படியிருந்த போதிலும், த.வெ.கழகத்தார் தமிழைப் புறக்கணிக்க எந்தக் காரணமுமில்லை. அவர்கள் தமிழுக்கு ஆற்றவேண்டிய உடனடி இன்றியமையா அடிப்படைப் பணிகளாகச் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றோம்:

1. ஆட்சிமொழியாகத் தமிழை முழுமையாகச் செயற்படுத்தவேண்டும்.
2. தமிழ்வழிக் கல்வியைக் கொண்டுவர உடனடி நடவடிக்கை வேண்டும்.
3. தமிழில் படித்தோர்க்கே தமிழ்நாட்டில் அனைத்து வேலைவாய்ப்பு களிலும் முன்னுரிமை தரவேண்டும்.
4. கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரவேண்டும்.
5. உருசியா, சீனா, பிரான்சு, சப்பான், கொரியா முதலிய நாடுகளில் உள்ளவற்றைப் போல உலகின் எந்த மூலையில் எந்த மொழியில் வரும் அறிவியல் செய்திகள், நுண்கலைச் செய்திகளை உடனுக்குடன் தமிழில் பெயர்த்தளிக்க ஏற்பாடு வேண்டும்.

மேலே கண்ட ஐந்தும் தேர்தல் பரப்புரையில் பொதுவாக அரசியல் கட்சிகளால் குறிப்பிடப்படுபவையே.

இவற்றைத் தொடர்ந்து ஆற்றவேண்டிய பல பணிகளை எப்போதும்போல், அவ்வப்போது ‘நற்றமிழ்’ தெரிவிக்கும்.

அடுத்து, ஆட்சிசெய்தவர்களின் மீது மக்களுக்கு வெறுப்பேற்படுத்திய பொதுவான சில சரிசெய்யப்படவேண்டிய செய்திகளைக் குறிப்பிட்டு வலியுறுத்த விரும்புகிறோம்.

1. தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 2024–இல் மட்டும் 11,363 ஆகும்; இது முந்தைய ஆண்டுகளைவிட மிகுதியாகும். இவற்றைத் தடுக்க உடனடி நடவடிக்கை வேண்டும்.
2. தமிழ்நாட்டில் 2024–இல் மட்டும் 19,965 தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன. தடுக்க உரிய நடவடிக்கை வேண்டும்.
3. தமிழ்நாட்டில் 2024–இல் மட்டும் 5,793 கணிசார் குற்றங்கள் (cyber crimes) நடந்துள்ளன. உரிய நடவடிக்கை வேண்டும்.
4. சாலைநேர்ச்சிகள் இந்தியாவில் வேறெந்த மாநிலத்தையும்விட தமிழ்நாட்டில் அதிகமாக 2024—ஆம் ஆண்டில் 69,828 நிகழ்ந்துள்ளன, 20,390பேர் இறந்துள்ளனர். இவற்றைத் தடுக்க உடனடி தக்க நடவடிக்கை வேண்டும்.
5. தமிழ்நாட்டில் மிக அதிகமாகப் புழங்கும் வெறிமயக்கப் பொருள்களை அறவே ஒழிக்க முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

   (புள்ளி விளக்கங்கள் 8–5–2026 ‘தைம்சு ஆப்பு இந்தியா’ நாளிதழில் உள்ளவை)

10–5–2026 அன்று நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு நிகழ்ச்சித் தொடக்கத்தில் முதலில் சமற்கிருதப்பாடலும் அடுத்து சனகணமன... எனும் இந்திய தேசியப்பாடலும் பாடப்பட்டு மூன்றாவதாகவே தமிழ்வணக்கப் பாடல் பாடப்பட்டுள்ளது. தமிழ்வணக்கப் பாடலை முதலில் பாடியிருக்க வேண்டும். இந் நிகழ்வின் முன்புவரை கடைப்பிடிக்கப்பட்ட மரபை மீறியிருக்கின்றார்கள். இது கண்டிக்கத்தக்கதும் கடுமையாக எதிர்க்கத் தக்கதுமாகும். இதுபோல் மீண்டும் நடக்கக்கூடாது. இதில் மாண்புமிகு முதலமைச்சர் கவனமாக இருக்கவேண்டுமென ‘நற்றமிழ்’ வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

இந்திய ஒன்றிய அரசு, இப்போது, ‘பிஎம்சிரி’ எனும் திட்டத்திற்கு ஒப்புதல் கையெழுத்துப்போட தமிழ்நாட்டரசை வலியுறுத்தி மடல் எழுதியிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இந்தத் திட்டம்

மும்மொழிக் கொள்கைக்கு – அதன்வழி இந்தி, சங்கதத் திணிப்பிற்கு– வழிகோலுவதாகும். எனவே, இருமொழிக் கொள்கையைக் கொண்டதாக அறிவித்துள்ள புதிய தமிழ்நாட்டரசு விழிப்பாக இருந்து அத் திட்டத்தை ஏற்கக் கையெழுத்திடக் கூடாது என்று 'நற்றமிழ்' வலியுறுத்துகிறது. மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் இராசுமோகன், இதில் எந்தச் சூதும் நேராமல் இருக்கப் பொறுப்போடு விழிப்பாக இருக்கவேண்டுமென 'நற்றமிழ்' வலியுறுத்துகின்றது.

தமிழ்நாட்டு ஆட்சியாளர்க்காக எழுதப்பட்ட அனைத்தும் புதுவை ஆட்சியாளர்க்கும் பொருந்தக்கூடியவையே. புதுவையில் 13–5–2026–இல் பதவியேற்றிருக்கும் புதிய அமைச்சரவை இவற்றில் கவனம் கொண்டு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென 'நற்றமிழ்' வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றது.

புதுவையில் நடைமுறையிலுள்ள 'நடுவண் இடைநிலைக் கல்விக் கழக' (CBSE) பாடத்திட்டப் பள்ளிகளில் இந்தி சங்கதத் திணிப்பிற்கு வழிசெய்யும் மும்மொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்போவதாக அண்மையில் செய்திகள் கூறியதைத் தொடர்ந்து, புதுவை 'தமிழ் உரிமைக் கழகம்' மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் தொடர்வண்டி மறியல் போராட்டமும் நடத்தியிருக்கின்றது. புதுவையின் புதிய ஆட்சியாளர்கள் இத் திட்டத்தை ஏற்கக்கூடாது. பா.ச.க.வும் ஆளும் கூட்டணியில் இருப்பதால், மாண்புமிகு முதல்வர் அரங்கசாமியார் இதில் கவனம் செலுத்த வேண்டுமென 'நற்றமிழ்' வலியுறுத்துகின்றது.

தமிழின் ஆக்கம், உயர்வு, தமிழரின் நலன், தமிழ்நாட்டு உரிமைகள்ஆகியவற்றிற்காக உண்மையான கவலையோடு எழுதும் 'நற்றமிழ்' இதழ், அவ்வப்போது பலவற்றைப்பற்றிக் குறிப்பிட்டுக் காட்டி எழுதிவருகின்றது. தமிழ்நாட்டிலும் புதுவையிலும் புதிய ஆட்சியாளர்கள் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனத் தமிழுள்ளத்தோடு 'நற்றமிழ்' கேட்டுக்கொள்கின்றது.

*ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்*
*நீள்வினையால் நீளும் குடி.* – குறள்:1022.

*குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்*
*சுற்றமாச் சுற்றும் உலகு.* – குறள்:1025.

**– த.ந.**

# பேரதிர்ச்சிச் செய்தி - அரும்பெருந்தமிழர் சீனு.அரிமாப்பாண்டியனார் காலமானார்

தமிழ்மாமணி புலவர் மு. இறைவிழியனாரின் மறைவிற்குப் பிறகு "நற்றமிழ்" இதழில் வெளிவந்த செந்தமிழ்ச் செம்மல் திரு. சீனு. அரிமாப்பாண்டியன் அவர்களுடைய உணர்வுப்பெருக்கின் விளைவாலாகிய கட்டுரைகளின் தொகுப்பாகிய '**உடன்படு உயிர்மெய்**' எனும் நூலினைச் சென்றாண்டு 22.05.2025இல் வெளியிட்டோம்.

*அந் நூலின்கண், இறைவிழியரின் உழுவலன்பர் திரு. அரிமா அவர்கள். இறைவிழியர் நீண்ட காலம் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்ற வேண்டும் எனும் பேரவாக் கொண்டு அதற்காகவே பெருவுழைப்பெடுத்து தொடர்ந்து அரும்பாடாற்றிய வினையாண்மையவர். இறைவிழியனாரைப் பற்றிய அவரின் எண்ணவோட்டங்கள் எத் தடையும் இன்றி, மடைதிறந்த வெள்ளமாய்ப் பொங்கிப் பெருகிப் பேரியாறு போல் கரைபுரண்டு ஓடுகின்றன. நம் அனைவரின் உள்ளங்களிலும் இறைவிழியர் இருப்பது உண்மையே. ஆனால், அரிமாப்பாண்டியனாரின் நெஞ்சத் துடிப்பில் ஒலிப்பவை இறையும்-விழியும் தாம் எனின் மிகையன்று,* என்றவாறு எழுதியிருந்தோம்.

**இன்றோ, திரு. அரிமாப்பாண்டியனார் அவர்களையே இழந்து துயருற்றுத் தவிக்கின்றோம்.**

தம் அருமைமகன் தமிழரிமாவைக் கொடிய நேர்ச்சியில் இழந்து துன்புற்றிருந்த நிலையில் இப்பொழுது தம் துணைவர் திரு. அரிமாப்பாண்டியனாரையும் இழந்து துயருறும் அவரின் அன்புத்துணைவியார் திருவமை தமிழ்ச்செல்வி அம்மையார் அவர்களுக்கும், அவர்தம் குடும்பத்தார்க்கும் ஆறுதலோ, தேறுதலோ, அமைவோ கூறஇயலாது நாமும் துடித்து அலமரலுறுகின்றோம்!...

# மிகத் தொன்பட்டதொரு தமிழ்வேர் !.....

- பேராசிரியர் அருளியார்

இய் : ஒளிநிறக் கருத்துவேர்

இய் > இய்ல் > இல் = ஒளி. கருதுக : விய் ( விரிவுக் கருத்துவேர்)

விய் > விய்ல் > வில் > விள் = (விரிவு)

இல் > இல் + அக்கு > இலக்கு = ஒளி

இலக்கு + அம் > இலக்கம் = ஒளி, பேரொளி

"இரு வேறு மண்டிலத்து இலக்கம் போல" (பரிபாடல் : 13 : 8 )

இல் > இல் + அகு > இலகு இலகுதல் = ஒளிபெறச் செய்தல்

"எரி அத்திரத்து இலக்கியே" (சைவ .நெறி. பொது : 294)

"இலகும் முடி" (தேவா : 1 : 37 : 8)

"வெண்பல் இலகு சுடர் " (திருவாய் : 8 : 8 : 1)

"காதில் இலகு மாமணி" (இயற். மூன்றாந் திருவந் : 66)

இலகு > இலங்கு (கருதுக : விலகு > விலங்கு

மருகு > மருங்கு )

இலங்குதல் = ஒளிறுதல் "இலங்கிழை எவ்வம் நலிய"

(புற : வெண்: 324)

"முள்ளெயிறு இலங்கின"(அகம்: 7 : 1)

"இலங்கு கதிர் வெள்ளி

தென்புலம் படரினும் (புறம் : 56 : 7

இல் > இல் +அக்கு > இலக்கு > + அம் > இலக்கம் = ஒளி

"எல்லே இலக்கம்" (தொல். சொல். இடை : 754 : 21)

இலக்கு > *(Greek) leuq > leuco leucos = bright*

*> (Gk) luchuos = light, lamp*

*Greek > (Latin) lux (Lux) . (L) luc luc-men > lumen.*

*(English) (lumen) > (luminate)*

*luminance* : ஒண்ணிலை (ஒளி திகழும் நிலை) -

*luminescence* : ஒளிவீச்சு *luminosity* = ஒண்மை

*(E) illume* = ஒளியுண்டாக்கு *illuminable* = ஒளிதரவல்ல

*illuminance* = ஒளித்திட்பம்

*illuminant* = ஒளியூட்டி *illumination* = ஒளியூட்டல்

*(L) (Luc-men >) (Luc-sna > lunā*

*(Eng) lunar* = நிலவுக்குரிய *lunarian* = நிலாக்குடிமகன்.
(நிலவில் (நிலா ஒளிறும் காலத்தில் ) அவ் வொளியில் உறங்குவோர்க்கு மனநோய் நேரும் என்ற மூடநம்பிக்கையின் வழி-)
*luna – lunatic* : பித்தியன், – கிறுக்கன்!
*Lunatic asylum* : மனநோய் மருத்துவமனை; மனநோய்ப் புகலகம்
*lunacy* = பித்தியம் (> பைத்தியம்)
*(Gk) lucos > (L) luc > (Eng.) lucid* : (ஒளியான >) தெளிவான *(clear) (lucidness, lucidity)*
*luciferous* = ஒளி தரும், ஒளி வீசும்
> *elucidation* = ஒளிவிளக்கம் ; தெளிவு விளக்கம்
*(Gk) leucos > lucos > (L) luc*
> *(Eng) lus-ter* = ஒளிமினுக்கம் (> மிகையழகு)
*(Eng.) illustrate* = விளங்க விளக்கு
*illustration* = தெண்விளக்கம்; படத்தொடு விரிவு விளக்கம்
*luculent* : தெண் விளக்கவுரை
*(Greek) (leuq) > leucos (luchuos) = bright > (Teut. Type) leughton*
*(Gothic) liuhat (OHG) lioht (German) licht*
*(M.E.) liht, light*
*(Dutch) licht (Old Merc) leht*
*(Anglo saxon) leoht (Grein)* : 11:177 > *(M.E.) light. (Chaucer C.T.).*
*(Eng.) light* = ஒளி (மே.கா. ) *lightning* = மின்னல்

இல் > எல் = ஒளி (இலை > எலை இடம் > எடம்)
( இ > எ – திரிபு)
எல் + பு > என்பு எல் + உம்பு > எலும்பு = வெண்ணிற (ஒண்ணிற)
எலும்பு (*bone*) (தொல்.பொருள் : 112: 27)
"வெள் என்பு அணிந்து" (குறுந். 182)
"என்புதோல் போர்த்த உடம்பு" (குறள் : 80)

எல் : ஒளி; வெண்மை (Gk.) *leucos (leuchuos) bright* > *white*
(Gk.) *leuco* : (வெள்ளை) (< ஒளி)
*Leucas aspera* : தும்பை – *Leucas cephalotes* : பெருந்தும்பை –
*leucas hirta* : மலையந்தும்பை – *Leucas linifolia* : அடுக்குத் தும்பை –
*Leucas martinicensis* : பெருந்தும்பை (2)
*Leucas rosmarinifolia* : சிறுதும்பை –
*Leucas urticaefolia* = பெருந்தும்பை(3) –
*leucocompound* : வெண்சேர்மம் *leucosis* : வெளிரணுமிகை
*leucosporous* : வெண்புரைப் பையுடைய – *leukamia* = வெளிர்புற்று –
*leukocyte* = வெண்குடமம் –
*leucocytolysis* = வெண்குடமமுறிவு –
*leukocytopoiesis* = வெண்குடமவுருவாக்கம் –
*leucocytopenia, leucopenia* = வெண்குடமக்குறை –
*leukodermia* = வெண்டோல் *leukoderma* = வெண்வீக்கம் –
*leukoencephalitis* : மூளைய வெண்பொருளழற்சி –
*leukoplakia* = வெண்புரை – *leukoplastid* = வெள்ளுருமணி –
*leukosis* = வெண்குருதிக்கலமிகை– *leukorrhea* = வெள்ளைத் தீட்டு...

இல் > எல் = ஒளி "எல்வளை" = ஒளி வளையல்
(ஐங்குறு : 20) (நற் : 218 : 10)
எல் : கதிரவன் (அகம் : 110 : 11) (திருமுருகு : 74 : 75)
வெயில் (ஏலாதி : 52)
எல் = பகல் "எல் விருந்தாகிப் புகுவம்" (ஐங்குறு : 396)
எல்லை = கதிரவன் (நற் : 378 : 5–6)
பகல் : "எல்லையும் இரவும்" (அகம் : 178 : 17)
> (*Greek*) *elios* (*coined from Greek*) > *helios* = *Sun*
இலத்தீனத்திலும் – பிற ஐரோப்பிய மொழிகளினுள்ளும் –
இச்சொல்வழிக் கலைச்சொல்லாக்கங்கள் நூற்றுக்கும் மேற்பட்டன!)

ஐயா!... ஐயையே!... விளங்குகிறதா? !...
– உலகு பயனுற நாம் வழங்கிய ஒளி!... ; பேரொளி!...

# ‘நற்றமிழ்’ ஆசிரியர் தமிழநம்பி அவர்கள் எழுதிய “அகத்தியர் புரட்டு: தமிழ், தமிழர்க்கு எதிரான சூழ்ச்சி” எனும் நூலிற்கான அணிந்துரை

– பேராசிரியர் அருளியார்

இந்த நாட்டினுள் உள்ள இனங்களுள்– தமிழினம் மட்டுந்தான் – தனக்கு ஒத்துவராத, ஒத்துழைக்காத, வலிப்பிழுப்புடைய இனம் என்பதனையும் – இந் நாட்டிலுள்ள மொழியினருள் தமிழ்மொழியினர் மட்டுந்தாம் (எண்ணிக்கையுள்ளாக விரல் விட்டெண்ணத் தகவாகும்– மீமிகச் சிலவர்!) தன் புளுகு– புரட்டு– பொய் வெடிப்புகட்கு– மூடுமந்திர ஏய்ப்புகட்கு– மதமால் உருட்டுக்கு எதிரானவராக உள்ளனர் என்பதையும் மிக நன்றாக அலசியாராய்ந்து ஓர்ந்து தேர்ந்து முடிவெடுத்த பின்னீடாக – வடநாட்டு ஆளுங்கணமாகி சூழ்ச்சியாக நெட்டுக்கும் வளர்ந்து மேலோங்கி கோலெடுத்திருக்கின்ற அடாஅடித் தடாலடிப் போக்குகளை நினைத்தபடி நிகழ்த்திக் கொண்டிருக்கின்ற – புலித்தோல் போர்த்திக்கொண்டு இவ் வொட்டுமொத்த நாட்டுவயல் முழுமைக்குள்ளும் நலந்தின்றவாறு வயிறு நிரப்பிவரும் நரியினமாகிய ஆரியப்பார்ப்பனியக் கோட்டிக் குழுவார், – மிகத் தீவிரைவார்ந்த கவனத்துடனும் – அழிம்புசார் உத்திமுறைகளுடனும் நம் தமிழினத்தையும் – நம் அருந்தமிழையும் எதிரனவாகக் கொண்டு,– இவற்றைத் தீர்த்தடக்கியே தீர்வதென்று தொடர்வினையாற்றி வருகின்றனர்!

பல் திசைகளினூடாக முறைப்படக் – காய் நகர்த்தியவாறு கலாம்கலாய்க்கும் தொடர்வினைப்பாட்டில் தோய்ந்தவாறே தொடர்கின்றனர்!

மேம்பட்ட உலகத்து அறிவுசார் ஆளுமைப் புலத்துக்குள்ளேயே துருத்தமிட்டு உள்ளூறுத்தஞ் செய்து அனைத்தையும் குழப்பித் தாந்தாம், தாம்மட்டுமேதாம் முதன்மை அறிவு வித்து என்னுமாறு– அப் புலத்தையே ஒப்பச்செய்து அறிவிக்கவும் செய்துவிட்ட அன்னயமுறையுள் நோய்நுண்ணி வகையாராகத் தொடர் வினையாற்றி வருகின்றனர்!

*அவற்றிலொரு கருக்கரிவாள் வினைமுயற்சியே, – காசி தமிழ்க்கூடல் (காசி தமிழ்ச்சங்கமம்) வினை முன்னெடுப்பு!*

*நீண்ட நெடுங்காலத்துக்கு முன் – பொய்யான ஒன்றை இட்டுக்கட்டி இடுக்கில் கொட்டிவிட்ட பிறகு – அவ் இருங்கதைப்புக்குக் கை – கால் – கண் – மூக்கு வைத்துப் பொய்ம்மைப் பொம்மலாக்கி (பொய்ம்மை > பொம்மை) – அவ் ஆடிப்பாவையைத் தொடர்ந்து ஆட்டிக்கொண்டு உயிர் மெய்யுருப் போல இல்பொருள் காட்சிப்படுத்தி (visual hallucination) – அறியாது அயர்ந்தார்ப் புலத்துள் அறியாமை வித்துவித்தி அமர்ந்தார்ந்து ஆரத் தின்று துருக்கும் அயர்விலா வழமையர், அவர்கள்!....*

*அவ் வழமை வலக்காரங்களுள் ஒன்றே – "அகத்தியன்" எனும் அறிகரியான சான்றற்ற ஒரு கொடும்பாவிப் பொம்மையொன்றனை, ஊர் உலகத்து உள்ளூடாக இழுத்துவந்தோடச்செய்ய முனையும் வினையேந்தல் கருமம், ஆகும்!*

*அதனைக் கூண்டோடு கூடியெரித்துச் சாம்பராக்கித் தூற்றியெறிய வேண்டிய பொறுப்பு – தமிழுலகத்துக்கு முன்னுள்ள கடப்பாடுகளுள் ஒன்றாகும்!*

*காலம் அறிந்து – அதனைத் தூக்கிநிறுத்தி – வெறிய வெற்றுப் பார்ப்புப் பாவையிது என, முற்படுமாறு தெளிவிக்க முன்வந்துள்ளோருள் ஒருவரே, நம்* **பெருந்தகை – தமிழநம்பி ஐயா** *அவர்கள்!...*

*நற்றமிழ் ஆசிரியராகி – நன்னய வினையாண்மைச் சான்றோராக இயங்கி – இலங்கி வரும் இச் செம்மல், அவ் இதழுள் வரிசைப்படும் இதழ்கள் நான்கனுள் – நாற்பத்தைந்து பக்கங்களுள் அகத்தியப் பெரும்பொய்ப்புளுகின் ஆழ – அகலங்களை நீள – நெடுங்குத்துகளைக் குறிப்பாய் உணர்த்திக் கண்டுகாட்டி விண்டுவிளக்கித் தெளிவித்துள்ள ஆய்வாக்கவிளைவே, – இவ் வுருவாய் ஈண்டு இலங்கும் இந் நூல்! அளவிற் சிறியது – பயனுள்ளோ பாரியது!*

போயதாகிய நூற்றாண்டுள்- அறுபதுகளின் இயல்வுக் காலத்துள்ளிருந்து, நம் பாவலரேறு பெருஞ்சித்திரனார்ஐயா அவர்களின் நெஞ்சுக்குள் மீமதிப்புயர்விடம்பெற்று நீடி - அவர் தலைமையிலேயே மணங்கொண்டு - மனம் முழுவதுமாக அவரையே மணந்தியன்றவாறான மாணப் பெருவாழ்வுப் பேற்றினைப் பெற்றவர், இவர்!

**"எனக்கென இறைவன் அனுப்பிய ஈரோர் உயிர்களில் இவர் உயிர் ஒன்று!" என்றுவந்தெழுதிய பெருஞ்சித்திர** வெளிப்பாட்டு ஒளித்தெறிப்பில் - இன்னார் இவர்! - இத்தகையார் இவர்! என்பதனை உலகமே விளங்கிக் கொள்ளத் தகும் ஓர் உண்மையே உள்ளுள்ளது!

பண்பும்- கொள்கையூற்றமும் - மனவுரனும் - உண்மைக்குத் துணைநிற்கும் உள்ளுணர்வும் - அவ்வுணர்வுக்கொத்த உடன்பாட்டு ஒன்றலும் - கொண்ட பேருள்ளத்தவரே இவர் என்பதனை இன்றுங் கட்டியங்காட்டும் மின்காந்த வரியே, - இவர் குறித்து அவரெழுதிவிட்டுப்போய் நிலைநிற்கும், இவ் இயைபு வரியாகும்!

இவற்றை யாம் உணர்ந்து உவப்பெய்தி நின்ற வாய்ப்பினை இற்றைக்கு முன்னீடாகிய நாற்பத்தைந்தாண்டுகட்கும் முற்பாடேயே எமக்கு வழங்கி நெஞ்சகத்துள் நீடி நிலைத்துள்ளவர், - நம் தமிழநம்பி ஐயா அவர்கள்!

தமிழின - தமிழ்நல - தமிழ்நாட்டுநல அடிப்படை வினையாண்மை நிகழ்வுகளுள், - ஓர் அரை நூற்றாண்டுத் தொடர்பு உண்மையர், இவர்!

அறிவியல் தெளிவும் - கழக இலக்கியத் தோய்வும் - இலக்கணத் துலக்கமும் - ஒழுங்கியல் நடப்பும் - உண்மைப் பிடிப்பும் - ஈப்பில் வண்மையும் - மெய்ம்மைமேல் மேம்பற்றுறுதியும் - மினுக்கத்துப் புறக்கணிப்பும் - எளிதில் இளகலும் - இழப்புள் திடநிற்பும் - அறிவுள் ஆழ்விறக்கமும் - கொண்ட கொண்டலாகும் புத்தம் புதுவகைச் சான்றோர், இவர்!

மொழிபெயர்த்தளிப்புகள் - பிறரின் அறிவுமுயற்சி வினைகட்குத் தோள்தரவுகள் - துணைநல்குகைகள் - துயரில் முட்டுக்கொடுப்புகள் -

*விடுதலையுணர்வுக்கு, விடிவு நோக்கும் வினைகட்கு உடம்பாடுறும் ஒத்துழைப்புகள் – பழுதில்லா வாழ்வியங்கல்கள் என்றவாறான பண்பு நலங்களின் படிவையே, இக் களஞ்சியரின் இயக்கமுறைகளுள் முற்றக் கண்டுவருகின்றோம்!*

*இலக்கணத் தெண்டெளிவும் – ஆங்கில விளங்கலும் – மொழிபெயர்ப்பாக்க உத்தி நெறியறிவும் – இயல்பொழுங்கும் – நயனேர்வும் – நற்கனிவும் கொண்டவராக நின்று – எங்களெல்லோர்க்கும் தோன்றுந் துணைஞராக நிலவும்* **"ஐயா தமிழநம்பி"** *அவர்களின் அறிவெண்ணத் துளிகளில் – இந் நூலும் ஒன்று! நற்றமிழ் அறக்கட்டளையின், நல்வெளியீடுகளுள் – ஒன்று, இது!*

*உற்றுநோக்கி உரம் பெறுவதும் – உண்மையுணர்ந்து உறுவது ஆற்றலும் – உம்முன் உள்ள உறுகடன்களாகுவன!*

*ஆவன ஆற்றுகவென எம் தமிழனத்தார் அனைவரையும் பண்பார்ந்த பணிவுடன் வேண்டுகின்றேன்!*

---

## குடிநலம் தீய்க்கும் குக்கல்!....

**- *அருளியார்***

*அடிப்படை அறிவு மின்றி அகப்பகுத் தறிவு மின்றிக்*
*கடிப்பகை யளவும் மூளைக் கணிப்பிலே செயற்பா டின்றி*
*மடிதிமிர் கொழுப்பு மல்கி மனத் தெண்போ சிறிது மின்றிக்*
*குடிநலந் தீய்க்கும் நாய்தான் குரைத்தெழும் சாதிக் கென்றே!*

*வளப்பெரும் புகழார் வான வரைநிலைப் பேரி னத்தின்–*
*அளப்பரும் அறிவி னாக்க அமிழ்தநேர் தமிழின்– ஈடில்*
*துளக்கநல் லியற்கை தோய்ந்த தொன்னலப் புலத்தின் நீண்ட*
*விளக்கமார் வரலா றெண்ணா வெறிநாய்தான் குலைக்கும் கூட்டே!*

*(: குக்கல் = நாய் கடிப்பகை = கடுகு*
*தெண்பு = தெளிவு கூட்டு = இனவொருமை)*

# தமிழைக் காக்கவேண்டாமா, தமிழர்களே?

## தமிழர்களான நம் அனைவருக்குமான பெருஞ்சொத்து நமது மொழிதான்!

**– சோம.வள்ளியப்பன்**

*என் உரைகளைக் காட்சிஊடகங்களில் பார்த்த சில இளைஞர்கள் என்னைப் புத்தகக்காட்சி போன்ற பொதுஇடங்களில் பார்க்கும்போது, "நீங்கள் ஆங்கிலத்தில் புத்தகங்கள் எழுதியிருக்கிறீர்களா?" என்று கேட்கிறார்கள். ஏன் என்று வினவினால், "தமிழ் படிக்கத் தெரியாது" என்கிறார்கள். பெருத்த ஏமாற்றமாக இருக்கிறது.*

**குமுக அழுத்தம்:**

*என்னிடம் அப்படிச் சொன்னவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள்தான். ஆனாலும், அவர்களுக்குத் தமிழ் படிக்கத்தெரியாது. தமிழில் எழுதுவது குறித்தோ கேட்கவேவேண்டாம். எனேவல் (வாட்சுஅப்), மின்னஞ்சல் (இமெயில்), குறுஞ்செய்திகள் (எசு.எம்.எசு.) போன்றவற்றில் எல்லாம் இவர்கள் ஆங்கிலத்தில்தான் எழுதுகிறார்கள் அல்லது தமிழ்ச்சொற்களை ஆங்கில எழுத்தில், 'Nee variyaa' (நீ வரியா) என்பதுபோல எழுதும் 'தமிங்கிலீசு'தான் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல்போனதற்கு முகன்மைக்காரணம், ஆங்கிலத்தில் பேசுவதும் எழுதுவதும் மேன்மையானது என்று உருவாக்கப்பட்ட குமுக அழுத்தம்தான்.*

*சில பள்ளிகளில் எல்லாவற்றுக்கும் ஆங்கிலத்திலேயே உரையாடவேண்டும் என்று மாணவர்கள் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். அதன் விளைவாகத், தமிழில் பேசக்கூடாது என்றாகிவிடுகிறது. பள்ளி, கல்லூரிகளில் நடக்கிற நிகழ்ச்சிகளில் பேசுபவர்கள் ஆங்கிலத்திலேயே பேசுகிறார்கள். அதனால், அப்படிப் பேசமுடிவதும், அதைச் சிறப்பாகப் பேசுவதும் மேன்மையானது என்னும் எண்ணம் மாணவர்களின் மனத்தில் பதிந்துவிடுகிறது. ஆங்கிலம் கைவராத பலர் சோர்வடைகிறார்கள். தன்னம்பிக்கை இழக்கிறார்கள். இந்தக் காரணங்களால் இளைய குமுகாயம் தாய்மொழியை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை.*

**மறைந்துவரும் அடையாளம்:**

இன்றைக்கு மாணவர்களின் பெயர்களில் வடமொழிப் பெயர்களே அதிகம் காணப்படுகின்றன. வருங்காலங்களில் ஒருவரை ஒருவர் வெளிமாநிலங்களிலோ, வெளிநாடுகளிலோ சந்தித்துக் கொண்டால், தமிழர்களுக்கு ஒருவரை ஒருவர் அடையாளம்கூடத் தெரியாமல் போய்விடும்.

கழகஇலக்கியங்களும் இலக்கணநூல்களும் கொட்டிக் கிடக்கிற தமிழ்மரபில், தமிழராகப் பிறந்துவிட்டு, அந்த மொழியில் பேசக்கூட இயலாதவர்களாக, எழுத இயலாதவர்களாக வருங்காலத் தலைமுறையினரில் பெரும்பாலானவர்கள் இருப்பது, மொழிக்கு எவ்வளவு பெரிய ஏதம்!

விவிலியம் எழுதப்பட்ட பண்டைய ஈப்ரு மொழி (இப்போது ஓரளவு மீட்கப்பட்டுள்ளது), புத்தர் பேசிய பாலி மொழி, புகழ்பெற்ற இலத்தீன், பிரமிட் காலத்திய எகிப்திய மொழி உள்ளிட்டவை இப்பொழுது வழக்கில் இல்லை. இப்போது உலகில் ஏறத்தாழ 7,000 மொழிகள் பேசப்படுவதாகவும், அவற்றில் 40% மொழிகள் பேசுவாரின்றி விரைவில் அருகி, இல்லாமலே போய்விடும் என்றும் யுனெசுகோ தெரிவிக்கிறது. தமிழும் அவற்றில் ஒன்றாக அழிந்துபோக நாம் விடலாமா?

**பிற மொழிக் கலப்பு:**

ஒரு வாடகை மகிழுந்தில் (காரில்) சென்றபோது, "தம்பி இடப் பக்கம் திரும்புங்கள்" என்று சொன்னேன். ஓட்டுநர் புரியாமல் என்னைத் திரும்பிப் பார்த்தார். அவர் தமிழ் தெரிந்தவர்தான். "லெப்ட்ல திரும்புங்க, ரைட் இல்லை" என்றேன். அப்போதுதான் அவருக்குப் புரிந்தது.

என்னுடைய மகிழுந்தில் பண்பலை வானொலி கேட்பேன். அதில் காதில் விழுந்ததை அப்படியே கொடுக்கிறேன். "ரெய்னி சீசன் வந்துவிட்டது. எல்லாரும் கேர்புல்லா இருக்க வேண்டும். எதுவும் டிசீசு வராமல் பிரிகாசியசாகச் சில வேலைகள் செய்ய வேண்டும். உடம்பில் ரெசிசுடன்சு இல்லாமல் இருக்கலாம். அடிபட்டு ஏதாவது இன்பெக்சன் ஆகிவிடக் கூடாது. அதற்குரிய மெடிசின்சு எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். என்ன நான் சொல்ற அட்வைசு கரெக்ட்தானே!" –இதை ஆங்கிலச் சொற்கள் கலப்பு இல்லாமல் சொல்ல முடியாதா என்ன?

ஆங்கிலம் மட்டுமல்லாமல், சமற்கிருதம், இந்தி, தெலுங்கு போன்ற பல்வேறு மொழிச்சொற்களும் தமிழில் கலந்து இருக்கின்றன. அவ்வப்போது சிலவற்றுக்கு மட்டும் என்று தொடங்கியது இப்போது பலவாகப் பெருகி, தமிழுக்கே இடமில்லாமல் செய்துவருகிறது.

தானியங்கிப் பணம் கொடுக்கும் 'ஏடிஎம்' நிலையங்களில், 'உங்கள் மொழியைத் தேர்ந்தெடுங்கள்' என்று கூறினால், தமிழர்கள் தமிழைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கிறார்களா? வாடிக்கையாளர் பணிகளுக்காகத் தொடர்பு கொள்ளும்போது தமிழ்மொழிக்கே முன்னுரிமை அளிக்கின்றார்களா? இத்தகைய தளங்களில் தமிழ் அதிகம் பயன்படுத்தப்படாவிட்டால், பின்னுக்குத் தள்ளப்படும்; பின், இல்லாமலே போய்விடும். தமிழ்நாட்டுக்கு வருகிற / தமிழ்நாட்டில் இருந்து புறப்படுகிற வானூர்தி நிலைய அறிவிப்புகள் கட்டாயமாகத் தமிழில் இருக்க வேண்டும். செல்வோர் அனைவரும் அதை வலியுறுத்திப் பின்னூட்டமாகக் கொடுக்க வேண்டும். அதிகாரிகளிடம் வலியுறுத்த வேண்டும்.

தமிழர்கள் அனைவரும் தமிழில் பேசுவது, எழுதுவது, படிப்பது போன்றவற்றை விடாமல் தொடர்ந்து செய்யவேண்டும்; அப்போது அப்படிச் செய்யாமல் இருப்பவர்களையும் இழுத்து உள்ளே கொண்டுவந்துவிட முடியும். நிலைமை இன்னும் அவ்வளவு மோசமடைந்துவிடவில்லை. தவிர, இப்போதைய தொழினுட்பமும் தமிழைத் தக்கவைத்துக்கொள்ள, வளர்க்க உதவியாக இருக்கிறது. ஆங்கிலமோ, இந்தியோ அது எந்த மொழியில் இருந்தாலும், அதைத் தமிழில் உடனடியாக மொழிமாற்றம் செய்துவிட முடியும். அதேபோல, தமிழில் இருக்கும் எதையும் – அது எழுத்துகளின் ஒலிவடிவமோ, வரி வடிவமோ, எதுவாக இருந்தாலும் அவற்றை உடனடியாகப் பல்வேறு மொழிகளில் மொழிமாற்றம் செய்துவிட முடியும். இவற்றை எல்லாம் தொழினுட்பம் எளிதாக்கியிருக்கிறது. அதன் காரணமாகத் தமிழ் மட்டுமே தெரிந்திருந்தால்கூடப் போதும்; இந்த உலகத்தில் பிழைத்துக்கொண்டுவிடலாம் என்கிற நிலை வந்திருக்கிறது.

அப்படியிருக்க, நாம் ஏன் தமிழை விடவேண்டும்? தமிழர்களைத் தவிர வேறு எவரும் தமிழைக் காப்பாற்ற முயல்வார்களா? அவர்களால் உறவும் உரிமையும் கொண்டாட முடியாதே. காந்தியைப் போலத் தமிழை வியக்கலாம், பாராட்டலாம்.

அவர்களும் கற்றுக்கொண்டு பேசலாம். அப்படிச் செய்பவர்களும் இருக்கிறார்கள். தமிழர்களான நம் அனைவருக்குமான பெருஞ்சொத்து நமது மொழிதான். அதை இழந்துவிடவே கூடாது.

**தமிழர்களின் கடமை:**

எனவே, தமிழர்களே! தமிழ் தெரிந்தவர்களிடம் தமிழில் பேசுங்கள். தமிழில் மட்டுமே பேசுங்கள். தமிழ் தெரியாதவர்களிடமும் அவர்கள் பணி, வணிகம் ஆகியன தமிழகத்தில் இருந்தால், அவர்களிடமும் தமிழில் பேசுங்கள். அவர்களைத் தமிழ் கற்க வைக்கலாம். நாம் அவர்கள் மொழியைக் கற்றுக் கொண்டு அவர்களிடம் உரையாடுவதைவிட, இந்த அணுகுமுறைதான் தமிழைக் காப்பாற்றும். பள்ளி, கல்லூரித் தாளாளர்கள், முதல்வர்கள், ஆசிரியர்களின் பங்களிப்பு இல்லாமல் இது முடியாது. செய்தி நாளிதழ்கள், கிழமை, மாதத் தமிழ்இதழ்கள் அனைத்தும் இதைக் கருத்தில் கொள்ளவேண்டும். தொலைக்காட்சி, வானொலி ஊடகங்களிலும், ‘யூடியூப்’ போன்ற குமுகஊடகங்களிலும் நல்ல தமிழில் பேசுவோரைப் பாராட்டவேண்டும். நன்கு பேசுபவர்களுக்கு வாய்ப்பும் ஊக்கமும் கொடுக்க வேண்டும்.

ஐந்து இலக்கம் சொற்கள் இருக்கிற செம்மொழியான தமிழில் பேசுவோம், எழுதுவோம், படிப்போம். ஓரிரு தலைமுறைகளில் நிலைமையை மாற்றிவிடலாம். ஒவ்வொரு தமிழரும் செய்தே ஆக வேண்டிய கடமை இது! ***(நன்றி : இந்துதமிழ்திசை– 21.11.2025)***

**நற்றமிழ் இதழ்க்குப் புரப்புக்கட்டணம் வழங்கியோர்:**

| எண் | திருவாளர்கள் | உருவா |
|---|---|---|
| 1. | தமிழ்த்திரு. பி.எசு.பால்ராசு, தமிழாசிரியர்,திண்டுக்கல் | 1000 |
| 2. | தமிழ்த்திரு. மருத்துவர் மு. உத்திராபதி, புதுவை | 500 |
| 3. | தமிழ்த்திரு. வே. அன்பரசன், புதுவை | 500 |
| 4. | தமிழ்த்திரு. ந. இரவி, அரும்பார்த்தபுரம், புதுவை | 250 |
| 5. | தமிழ்த்திரு. துரை. பாசுகரன், புதுவை | 240 |
| 6. | தமிழ்த்திரு. சி. திருஞானம், புதுவை | 240 |
| 7. | தமிழ்த்திரு. கே.எம். கருப்பையா, வெங்காலூர் | 240 |
| 8. | தமிழ்த்திரு. பெ. இரவிச்சந்திரன், பெரம்பலூர் | 240 |

**புரப்புக்கட்டணம் வழங்கிய நற்றமிழ் அன்புள்ளங்களுக்கு நன்றி!**

# மதுரையில் தமிழுக்குத்தான் முதலிடம்!

*(23–4–2026 நாளிட்ட ‘இந்து தமிழ் திசை’ நாளிதழில் வந்த செய்தியைக் கீழே தந்துள்ளோம். இனி, தமிழ்நாட்டில் எல்லாக் கோயில்களிலும் தமிழிலேயே குடமுழுக்கு நடத்த இத்தீர்ப்பு வழிவகுக்கும் என்று நம்புகின்றோம். தமிழ்நாட்டரசும் இதற்குத் தக்கவகை ஆணையிடவேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்).*

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கின் போது ‘வேத’ மந்திரங்களுடன் தமிழுக்கும் சமமான முகன்மை (முக்கியத்துவம்) அளிக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர் நயன்(நீதி)மன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டுள்ளது.

மேலும், கழகம் (சங்கம்) வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையின் சிறப்பைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கின் உத்தரவு படியும் (நகலும்) தமிழில் வழங்கப்பட்டுள்ளது.

வழக்கின் முகன்மை (முக்கிய) விளக்கங்கள்:

**தமிழுக்கு முன்னுரிமை**: மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் குடமுழுக்கு விழாவின்போது, சமற்கிருதத்திற்கு இணையாகவோ அல்லது அதைவிட அதிகமாகவோ தமிழ்மொழியையும், தமிழ் வழிபாட்டுமுறைகளையும் பயன்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது, வரலாற்றுச் சிறப்பு.

திருக்குறள் அரங்கேறிய பொற்றாமரைக் குளத்தைக் கொண்டுள்ள மதுரையில் தமிழுக்குத்தான் முதலிடம் என நயன்மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

**அறநிலையத்துறைக்கு உத்தரவு**: குடமுழுக்குத் தொடர்பாக இதற்குமுன் உயர் நயன்மன்றம் பிறப்பித்த உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டமை குறித்து நிலைஅறிக்கை தருமாறு இந்து சமய அறநிலையத்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு**: உயர் நயன்மன்ற உத்தரவுகள் பொதுவாக ஆங்கிலத்தில்மட்டுமே வெளியாகும்நிலையில், இந்த வழக்கின் உத்தரவு வரலாற்றுச் சிறப்புமிக்கவகையில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

# அடிப்படைக் கலைச்சொற் பட்டியல்-(10)

**– செவ்வியன்**

*array processor* – 1.அணிச்செயலாக்கி
2.நடுவண்செயலாக்கி
3.ஒரே சமையத்தில் ஒரு தரவுத்தொகுப்புக்கும் அதிகமாக செயலாக்கம் நிகழ்த்தல்

*arrester, Surge arrester* – உயரெழுச்சி – மாற்றிக் காப்புக்கருவி (உயரெழுச்சி மின்னழுத்தத்தை மாற்றித் திருப்பி வரம்பில் காக்கும் கருவி)

*article* – ஆய்வுக்கட்டுரை, உருப்படி, பண்டம்

*artificial echo* – செய் – எதிரொலி (செய்யெதிரொலி)

*artificial intelligence (AI)* – செய்யறிவு, செய் நுண்ணறிவு

*assembler* – தாழ்–மட்ட நிரலாக்க மொழியில் எழுதப்பட்ட நிரல்களைப் பெயர்த்து (அ) மாற்றி எந்திர மொழியாக்கப் பயன்படும் மென்பொருள்

*assembly, ASM* – 1.காண்க: *Assembly language*
2. கோத்திணைப்பு

*assembly language* – தாழ்–மட்ட நிரலாக்கமொழி

*Asymmetric Digital subscriber line (ADSL)* – ஒப்புரிமையரின் சமச்சீரற்ற எண்மக் குறியை வழி (இயல்பான தொலைப்பேசி இணைப்பு வழி)

*asynchronous speed* – ஒத்தியங்காவேகம் (முழுச்சுமை, முழுமின்னழுத்தத்தில் அலைமின்–தூண்டல் மின்னோடி வேகம்)

| | | |
|---|---|---|
| *at symbol* | – | @ – சின்னம் |
| *ATM card* | – | தன்னியக்கப் பணம் செலுத்தும்/எடுக்கும் அட்டை |
| *atom* | – | அணு |
| *attach a file* | – | கோப்பை இணை (மின்னஞ்சல் செய்தியுடன் கோப்பொன்றை இணைத்து இரண்டும் சேரிடம் அடையச்செய்தல்) |
| *attenuation* | – | 1.நொய்தாதல் 2.(குறியை–*signal*) வீச்சுவலிவு குறைதல். |
| *attributes* | – | கோப்பணுகல் கூறுகள் 1.கோப்பை எப்படிப் பார்ப்பது? திருத்த முடியுமா? எனத் தீர்மானிக்கும் கோப்பணுகல் வகை. 2.திரையில், அச்சுப்பொறியில் எழுத்துருவின் பண்பைத் தடிப்பெழுத்து, அடிக்கோடிடல் என மாற்றும் சிறப்பியல்பு |
| *audio* | – | கேளொலி |


## நற்றமிழ்க் கட்டணவிளக்கம்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | உரு. | 20.00 |
| ஆண்டுக்கட்டணம் | உரு. | 240.00 |
| ஐந்தாண்டுக்கட்டணம் | உரு. | 1000.00 |
| வாணாள் கட்டணம் | உரு. | 2500.00 |

*(UPI – Unified Payments Interface)*
ஒ.செ.ப. ஒருங்கிணை செலுத்தல் பரிமாற்றம்:
பேசி எண் : 89 39 84 59 01 (*S. Sejiyane*)
பணவிடை செலுத்த விழைவோர்
'**நற்றமிழ்**' பெயரில் இதழ் முகவரிக்கு அனுப்புக!

# புதுச்சேரி மரபினை மீறிய கம்பன்விழா

## *தமிழ் உரிமை இயக்கம் முற்றுகை!*



*புதுச்சேரியில் ஆண்டாண்டுக்காலமாக கம்பன் கழகம் சார்பில் கம்பன்விழா நடத்துவது வழக்கம். 2026–ஆம் ஆண்டு 59–ஆவது கம்பன்விழா 08–05–2026 அன்று தொடங்கி புதுச்சேரி கம்பன் கலையரங்கத்தில் நடைபெற்று முடிந்தது. இந்த விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலிலும், இறுதியாகத் தேசியப்பாடலும் இசைப்பது மரபு. ஆனால் ஆளுநர் கலந்துகொண்ட இந்த விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தினை முதலில் இசைக்காமல் மரபுகளை மீறி, வந்தே மாதரம் பாடல் முதலிலும், இரண்டாவதாகத் தேசியப்பாடலும் இறுதியாகத் தமிழ்த்தாய்வாழ்த்துப் பாடலும் இசைக்கப்பட்டுள்ளன. இதனை நேரில் கண்டவர்களும் செவிவழியாக அறிந்தவர்களும் பெருங் கோவமடைந்தனர்.*

*இந்தச் செய்தி தமிழ்உரிமை இயக்கத்திற்குத் தெரியவந்ததும் இயக்கத்தினர் ஒன்றுதிரண்டு கம்பன்கலையரங்கத்திற்குள் நுழைய முற்பட்டபோது காவல்துறை உள்ளே நுழைய விடாமல் தடுத்து நிறுத்தி வாயிலைப் பூட்டியது. பின்னர் கம்பன் கலையரங்கம் வாயில் முன்பு* ***கண்டன முழக்கங்கள் எழுப்பி முற்றுகைசெய்து போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்உரிமை இயக்கத்தினரைக் காவல்துறை தளைப்படுத்தியது.***

***தமிழ்த்தாய் வணக்கப் பாடலை அவமதித்த கம்பன் கழகத்தையும், புதுவைஆளுநரையும், புதுவைஅரசையும் 'நற்றமிழ்'வன்மையாகக் கண்டிக்கின்றது.***

# தொடர்வண்டி மறியல்போர்

**– தமிழ் உரிமை இயக்கம்**



இந்திய ஒன்றியத் தலைமை அமைச்சர் மோடி தலைமையிலான வற்பந்தரசிய (பாசிச) பா.ச.க அரசைக்கண்டித்து தொடர்வண்டி மறியல். ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள மும்மொழிக் கல்வித்திட்டத்தைக் கைவிட வலியுறுத்திக் கண்டன முழக்கங்களோடு அணிவகுப்பு நடைபெற்றது.

08.05.2026–இல் நடைபெற்ற மாபெரும் தொடர்வண்டி மறியல் போராட்டம் என்பது நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களோடு சுமார் 500 பேர் பங்கேற்ற பெரும் போராட்டமாகும்.

புதுச்சேரி காவல்துறையினரும், தொடர் வண்டி நிலையக் காவல்அதிகாரிகளும் ஒன்றிணைந்து நம் எழுச்சிமிகு முழக்க அணிவகுப்பைத் தடுத்திடத் தடைகள் போட்டனர். அத் தடைகள் அனைத்தையும் அடித்து நொறுக்கிவிட்டு, வீரம் செறிந்த தமிழர்கள் வெகுண்டெழுந்து ஓடிவந்த தொடர்வண்டியைத் தடுத்து நிறுத்திக் கண்டன முழக்கங்களை ஓங்கி எழுப்பினார்கள்.

இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த போராட்டமானது, ஒன்றிய அரசையும், தன் கைப்பாவையாகச் செயலாற்றும் புதுச்சேரி மாநில ஆட்சியாளர்களையும் உண்மையில் குலைநடுங்கச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக மும்மொழிக் கல்வித்திட்டத்தைக் கைவிட வேண்டும்; இல்லையெனில் புதுச்சேரியில் மீண்டுமோர் மொழிப்போர் தொடங்கும். அதனை யாராலும் தடுக்கமுடியாது என்கிற நிலைக்கு மக்களுடைய எழுச்சி உருவாகும் என்பதை எச்சரித்து முழக்கங்களோடு கலைந்து சென்றனர்.

*(தமிழ்மொழிக் காப்புக்கும் தமிழின எழுச்சிக்கும் தமிழ் உரிமை இயக்கம் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு 'நற்றமிழ்' துணையிருக்கும்.)*



# அரிமாப்பாண்டியன்

**– பேராசிரியர் அருளியார்**

எழுத்தாளர் – தங்குதடையற்ற பேச்சாளர் – பெரியார் நெறியாளர் – நேர்மையான ஆசிரியர் – ஒழுக்கமானவர் – பண்பாளர் – நாகரிகமானவர் – இழப்பதில் ஒருவகை இன்பங் கண்டவர் – தனித்தமிழ்க்காகப் பல மாநாடுகள் நடத்தியவர் – பேரணிகள்

*கூட்டியவர் - பல கருத்தரங்குகள் நடத்தியவர் - அறக்கட்டளை நிறுவி அறிஞர் பலரையும் அழைத்து வகுப்பெடுக்க வைத்தவர் - நூலாசிரியர் - முதலில் எழுதிய நூல்: (50 ஆண்டுகளுக்கு முந்தி) "பெரியார்" இதழாசிரியர் - நண்பர்களை உறவாகக் கொண்டவர் - பிள்ளைகளைக் கண்களாகக் கருதியவர் - மனைவியை உயிராகக் கருதியவர் - இரக்க மனத்தவர் - யார் பணம் கேட்டாலும் வேல்முருகனை நோக்கி ஓடியவர்! - பிறர்க்குத் தான் வாங்கிக்கொடுத்த பணத்திற்கு வட்டி கட்டிக் கொண்டிருந்த வள்ளல்! இனவுணர்வின் மரபு அடையாளமென மதித்து - மீசை வீச்சுகொண்டு முறுக்கி மேலேற்றியவர்!நயப்பாசையில்லாத - தன்நலம் நோக்கி வளையாத திமிரர்!. . . இனத்தோடு உளங்குழைந்தவர் ; உயிருணர்வார இழைந்தவர் - இனஎதிரிகளுக்கு முன் எரிமலையாய்க் கொதித்து நின்றவர்! அன்பு காட்டுவதில் - உருகிக் கரையும் தனி வகையர்! உடல்நலம் ஓம்பாதவர் - துய்ப்பை மறுத்தவர் - அரிந்துபார்த்து அறிவு பெருகவே என நம் மருத்துவமாணாக்கர் பயன்கருதி தன் உடம்பையும் உடம்பட்டு ஈந்தவர்!. . . நெஞ்செல்லாம் எரிகிறது! உயிரெல்லாம் நடுங்குகிறது!*

## அரிமா இன்றடங்கியது!

*40 ஆண்டுகளுக்கு முந்தி அரிமாப்பாண்டியன் எப்படிப்பட்டவர் என்பதனை 1.6.1987 அன்று கம்பன் கலையரங்கில் நிகழ்ந்த பாவேந்தர் தமிழ்இயக்கத்தின் சார்பில் ஏற்பாடாகியிருந்த அவையோரிடம் பாடல் வழி விளக்கினார்! அரிமா அவர்களைப் பாட அழைத்த அருமையான அழகான நிகழ்வு, அது! பெருஞ்சித்திரனார், இப்படி அழைத்தார்! அரிமாப்பாண்டியன் - பாட வந்த தலைப்பு - உற்றுக் கவனியுங்கள்* **பாவேந்தரின் இனவுணர்வு** *பெருஞ்சித்திரனாரின் அழைப்புமுறை இப்படிப் போகின்றது!*

*'பெரியார் கொள்கையின் அரிமாப்பாண்டியன்!*
*அரிய இனஉணர்வு அளிக்கும் பாவலர்!*
*ஆனைமுத் தீன்றிய அணிமுத்தைச் சூடியவர்!*
*கோணைக் கொள்கையர் அல்லர்! - என்றும்*
*குனியாக் கொள்கையர்! தனித்தமிழ் உணர்வினர்!*
*இனநல வுணர்வை எடுத்திங்கு உரைத்திட*
*அன்புடன் அவரை அழைப்போம்! அவரும்*
*தென்புடன் நறும்பா திகழ்ந்திடத் தருவார்!*

*என்ன கொள்கையோடு வாழ்பவர்?*
*எந்த மரபில் மணங் கொண்டவர்?*
*அவ் ஆனைமுத்தின் மகள் எப்படிப்பட்டவர்*
*கொள்கையில் அவருடைய உறுதி எப்படிப்பட்டது*
*அவர் என்ன வகையான தமிழ் உணர்வினர்!*
*எதனைப் பற்றிப் பாடவருகிறார்?*
*அவ் இனநலவுணர்வுப் பாவினை எப்படியாகத் தருவார்?*

*எல்லாம் அவர் அழைப்பில் அடங்கியிருந்தன. 40 ஆண்டுகள் ஓடிவிட்டன! இன்று – அடங்காச்சினம் வாய்ந்த அரிமா – இன்றடங்கியது!. . .*

*"நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்*
*நலிவதை நான் கண்டும்*
*ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி*

*உழைத்திட நான் தவறேன்" எனப் பாவேந்தர் அன்று வெளிப்படுத்திய இலக்கிய வரிக்கு நேற்று வரையிலாக – இலக்கணமாகவே நம் முன் வாழ்ந்து காட்டியவர் "அரிமாப்பாண்டியன்"! அடங்கிப்போன எம் உடம்புங்கூட அரிய பயன்பாடு கொண்டதே!*

*அறிவு அறிய – இதனையும் அரிக என – உடன்பாட்டோடு உடம்பையுங் கொடுத்தவர்!*

*(அரிமாப்பாண்டியனாரின் உடற்கொடைக்கான ஊர்வலத்திற்குமுன், அருளியார் ஆற்றிய இரங்கல் உரையினின்று)*

---

# எங்கள் அண்ணன் அரிமா உறங்கும் எரிமலை ஆனார் தெரியுமா?

**– புதுவைத் தமிழ்நெஞ்சன்**

தமிழ்மான அரிமாப்பாண் டியனின் ஈகம்
தமிழ் தமிழர் தமிழ்நாடு
காக்க என்றும்
தமிழருவி போலயிங்கே பேச்சி ருக்கும்
தமிழரிமா தோற்றத்தில்
ஒத்தி ருக்கும்

தமிழுக்குத் தொண்டுசெய்ய தளரா திங்கே
 தணலாக நிமிர்ந்திருக்கும்
 நெருப்பு நெஞ்சர்
தமிழ்மறவர் அரிமாவின் சீற்ற மெல்லாம்
 தமிழுக்குப் பாடாற்றும்
 தகைமை தானே!

இடிபோல இடிக்கின்ற முழக்கம் போல
 இருட்டினிலே ஒளியேற்றும்
 மின்னல் போல
வெடிகுழலை கையிலேந்தும் புலிகள் போல
 வீறுமிக்க போராளி
 வாழ்க்கை வாழ்ந்தார்
நடிப்பில்லா நட்பிற்குச் சிறந்த அண்ணன்
 நாடுமொழி இனத்திற்கு
 உழைத்த நண்பர்
துடிக்கின்ற தமிழ்நெஞ்சில் இருப்பார் என்றும்
 தூயதமிழ் மொழிபோல
 நாளும் இங்கே

எரிமலையின் சீற்றமாகக் கொதித்து நிற்பார்
 எதுவரினும் அஞ்சாமல்
 துணிந்தி ருப்பார்
பரிதிபோல இருளோட்டும் கொள்கை கொண்டார்
 பகலிரவு பாராது
 தொண்டு செய்தார்
கரிமாவின் வலிமையினைப் பெற்றி ருந்தார்
 கசடறவே தனித்தமிழைக்
 கற்றி ருந்தார்
உரிமைக்குக் குரல்கொடுக்க முன்னி ருந்தார்
 உடலின்றி உயிரினிலே
 கலந்து விட்டார்

# நிறைந் தினிது வாழ்வார் நிலைத்தே!

**புலவர் செ.இராமலிங்கன்**
*செயல்தலைவர் திருவள்ளுவர்மன்றம்,*
*பாரதிதாசன் நகர், புதுச்சேரி*

*அறிந்தவர்க் கினியர் அரும்பணிக் குதவும்*
*சிறந்தநல் ஈகையர்! செந்தமிழ் காத்திட*
*பெருந்தொண் டாற்றிய பெருமைக் குரியவர்!*
*அருள்திரு உடைய அன்புடை நட்பினர்!*
*தனித்தமிழ் புதுவையில் தழைத்திட உழைத்தவர்!*
*இனித்திடும் தமிழை எங்கும் பரப்பிய*
*தனித்தமிழ்க் கழகத் தகைமை யாளர்!*
*கடைகள் தோறும் தமிழ்ப்பெயர் பலகைகள்*
*நடைமுறைப் படுத்திட ஊர்வலம் நடத்தி*
*ஒருநாள் மாநாட்டை உணர்வுடன் நடத்திய*
*அருமைக் குரியவர்! ஆற்றல் மிக்கவர்!*
*அஞ்சா நெஞ்சர்! துஞ்சாத் தூயர்!*
*செஞ்சொல் தமிழிலே பிறசொல் கலவாது*
*உரைசெயும் கண்ணியம் போற்றும் செம்மல்!*
*நிறைமனத் தெழுந்த செழுங்கருத் தெல்லாம்*
*வள்ளுவர் குறளின் வாழ்வியல் காட்டும்!*
*உள்ளுவ தனைத்தும் உயர்நோக் குடைத்து!*
*ஒவ்வொரு மாதமும் பதினோ ராம்நாள்*
*எவ்வேலை எவ்வா றிருப்பினும் காலையில்*
*ஏழு மணிக்கெலாம் பேருந்து நிலையத்*
*தெழுந்துள வான்புகழ் வள்ளுவர் சிலையைத்*
*தொழுதுபூ மாலை அணிவித் தொருகுறள்*
*கூறி மகிழ்ந்தநம் மாமாந்த ரென்னும்*
*அரிமாப் பாண்டியனார் ஆழ்மனத் துள்ளே*
*நிறைந்தினிது வாழ்வார் என்றும் நிலைத்தே!*

# தமிழியக் குணக் குன்று!

**– அறிவியல் அறிஞர் தாமரைக்கோ**

*அரிதரிது மாந்தராய்ப் பிறப்பது அரிது! அதிலும் ஐம்புலன் கேடுறாமல் அமைவது அரிது! எல்லாம் சரியாக அமைந்தும் யார் ஒருவரும் தெளிவுடையாராகத் தம்மைத்தாமே ஆக்கிக்கொள்வது அரிது! அவர்களினும் அறவோனாக மலர்ந்து வருவது அரிது! அவரே, தம்மைச் சுற்றி வாழும் மக்களுக்குப் பயனுடையவராக வாழ்தல் அரிதினும் அரிது!*

*கல்வி கற்கும் காலந்தொட்டே தமிழின்மீது கொண்ட காதலாலும், பெரியாரியத்தின் மீது கொண்ட பற்றினாலும் ஒரு தெள்ளியராக முகிழ்த்தவர் நம் அரிமாப்பாண்டியன் அவர்கள் .*

*நம் அன்புக்கும், பாசத்திற்கும் உரியவராக இருந்து, தமிழ் இன மேன்மைக்கும் கடைசிவரை பாடாற்றிச் சென்ற அரும்பெறல் உயர் மாந்தர்! சிறந்த பண்பாளர், நல்ல சிந்தனையாளர், முழுமையான கொள்கையாளர்! தமிழுக்கோ, தமிழினத்திற்கோ கேடு விளைப்போர் யாராக இருந்தாலும் தூக்கி எறிவார்! பணிவின் அடையாளம், அதே நேரத்தில் நயன்மை தவறுமிடத்து அறச்சினம் கொண்டு வெகுண்டெழுவார்!*

*அவரின் நினைவும் செயலும் எப்போதும் தமிழ், தமிழினம் சார்ந்தே இருக்கும்! யாராக இருந்தாலும் அவரை எடையிட்டுப் பார்க்காமல் முன்வந்து உதவிசெய்யும் வள்ளன்மை மனம் படைத்தவர்!*

*அவரின் சொந்த வாழ்வு மிகவும் துயரம் நிறைந்தது என்றாலும், கடைசிவரை அவரின் கொள்கையில் நெகிழ்ச்சி இல்லை; அவரின் பொது வாழ்வு முழுமை உடையதாகவே இருந்து முடிந்தது!*

*எல்லார் நெஞ்சங்களையும் ஈர்த்துச் சென்றுள்ளார்; தமிழினப் போராளி; இவர் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்பார்! அரிமாப் பாண்டியன் என்னும் தமிழியக் குணக்குன்றின் புகழ் தமிழினத்திற்கான பெருமையாக விளங்கும்!*

# தமிழாய் வாழ்ந்த அரிமாப்பாண்டியனார்

ந.மு.தமிழ்மணி,
பொதுச்செயலாளர்,
உலகத்தமிழர் பேரமைப்பு

ஒரு நாள் அரிகிருட்டிணன் என் வீட்டுக்கு வந்தார். குப்பாயம் அணிந்த அரிவாள் மீசை வைத்திருந்த அவர் ஆசிரியர் என்பதும், சொக்கநாதன்பேட்டையைச் சேர்ந்தவர் என்பதும் அவர் தமிழ்நிகழ்ச்சிகள் பலவற்றிலும் கலந்து கொண்டபோது அறிந்திருந்தேன். தான் சிறார்பாடல்கள் சில எழுதியிருப்பதாகவும் அவற்றிலுள்ள பிறமொழிச்சொற்களை நீக்கிடவிரும்புவதாகவும் பாடல்களை செம்மைப்படுத்திக் கொள்ள விரும்புவதாகவும் அதை நான் செய்து தரவேண்டுமென்றும் என்னிடம் கூறினார். அப்போது, இளந்தமிழர் தனித்தமிழ் இயக்கம் என்ற அமைப்பை நான் செயலாளராக இருந்து நடத்திவந்தேன். என் வீட்டிலிருந்த அந்த அமைப்பின் பெயர்ப்பலகையையும் அருகில் பறந்துகொண்டிருந்த புலிக்கொடியையும் அடிக்கடி பார்த்து வருவதால் என்னை அணுகியதாகக் கூறினார். ஆசிரியரும், என்னிலும் மூத்தவருமான அவருடைய பாடல்களை நான் செம்மைப்படுத்தித் தருவதினும், மூத்த அறிஞர் எவரையேனும் அணுகிச் செய்வதே சரியாக இருக்குமென நான் கூறினேன். ஆனால், அவர் அதை ஏற்கமறுத்து அறிஞர் சிலரைத் தமக்கும் தெரியுமென்றும் அவர்களை அணுகிட விரும்பவில்லை என்றும் கூறி, வலியுறுத்தி என்னை ஒப்புக்கொள்ளச் செய்தார்.

இதற்காக அவர் நாளும் இரவு 9.30 மணிக்கு மேல் என் வீட்டுக்கு வருவார். அரியாங்குப்பம் தாண்டி ஆண்டியார்பாளையம் பள்ளியில் பணிபுரிந்து வந்த அவர் பணிமுடித்து நகரத்துக்கு வந்து நண்பர்களோடு அளவளாவி முடித்து, என்னிடம் வந்துசேர அந்நேரம் ஆகிவிடும். நானும் என் வேலைகளை முடித்து அந்நேரம்தான் திரும்புவேன். அவர் இரவு உணவை உண்டிருக்க மாட்டார். உண்ணச் சொல்லி எவ்வளவு வற்புறுத்தினாலும் ஏற்கமாட்டார். என்னை உண்டு வரும்படியும், தான் காத்திருப்பதாகவும் கூறுவார். விருந்து புறத்ததாத் தானுண்ண இயலுமோ? ஆக இருவரும் பயிற்சியைத் தொடங்குவோம். இப்படியாக இடைவிடாது முயன்று, அவரின் பாடல்கள்

ஒழுங்கமைக்கப்பட்டன. அவர் அவற்றை நூலாக வெளியிட முடிவெடுத்தார். ஐயாபாவலரேறு அவர்கள் 'பள்ளிப்பறவைகள்' என்ற சிறார்பாடல் நூலொன்றை அளித்திருந்தார். அந்த நினைவொடு, இவரின் நூலுக்குப் 'பாடற்பறவைகள்' எனத் தலைப்பிட்டேன். இந்நூலின் வெளியீட்டுவிழா வணிகஅவை அரங்கில் நடைபெற்றது. அவர் நூலினை வெளியிட அப்போதைய கல்வித்துறை அமைச்சரான திருவமை. இரேணுகா அப்பாதுரை (1980 – 83) என்பாரை அழைத்திருந்தார். பேராயக் கட்சியைச் சேர்ந்த ஓர் அமைச்சரை நூல்வெளியிட அழைப்பதா என்ற மனத்தாங்கல் நண்பர்களிடையே ஏற்பட்டது. கல்வித்துறை அமைச்சர் என்ற ஒரு காரணத்தின் பொருட்டேதான் அவரை அழைத்ததாகக்கூறி, அவர் நண்பர்களை அமைதிப்படுத்தினார்.

ஒரு சமயம் ஐயாபாவலரேறு அவர்கள் அருளிஐயா அவர்களின் வீட்டில் தங்கியிருந்தபோது இவரை அழைத்துச்சென்று அறிமுகம் செய்துவைத்தேன். அக்காலத்தில் தென்மொழி அன்பர்கள் அரிமா என்ற முன்னொட்டுப் பெயரைச் சூடிக்கொள்வது வழக்கம். அரிமாவளங்கோ, அரிமாமகிழ்கோ, அரிமாஇளங்கோ, அரிமாவளவன் என்போர் இவ்வாறு பெயர் சூடியிருந்தனர். அவ்வகையில், நண்பரும் அரிமாப்பாண்டியன் ஆனார். அருளிஐயா அவர்கள் நடத்திய 'தமிழ்ப்பறை' என்ற இதழின் படிகளை அவருக்குக் கொடுத்திருந்தேன். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழம் ஆகிய இதழ்களைத் தொடர்ந்து வாங்கிப் படித்து வந்தார்.

இதன் நீட்சியாக, தனித்தமிழ் வளர்ச்சிக்கென அமைப்பொன்றைத் தொடங்கிடும் நோக்கத்தோடு, நண்பர்களோடு கலந்துபேசி, கலந்தாய்வுக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார். புதுச்சேரி வ. உ. சி. தெரு அல்லது தில்லை மேத்திரித் தெருவில் இருந்த ஆசிரியர் தமிழ்நேயன் (பிரான்சிசு.....) என்பாரின் இல்லத்தில் மிகச்சிறந்த விருந்தோம்பலோடு இக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அறிஞர் பலரும், தென்மொழி அன்பர்களும் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில்தான் தனித்தமிழ் இயக்கம் என்ற அமைப்பு, தோற்றம் பெற்றது. திரு. க.தமிழமல்லன், திரு. சீனு. அரிமாப்பாண்டியன் போன்றோர் பொறுப்பேற்றனர். நான் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றேன். அதன்பின், திரு. க.தமிழ்மல்லன்

அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில் இயற்றமுயன்ற தீர்மானங்கள் பற்றி கருத்து முரண்பாட்டால், நான் அமைப்பிலிருந்து விலகிக் கொண்டேன். சில காலத்துக்குப்பின் வேறுபல காரணங்களால் பிரிந்த பொறுப்பாளர்கள், அரிமாவின் பொறுப்பில் தனித்தமிழ்க்கழகம் என்று அமைப்பினைத் தோற்றுவித்தனர். இக்கழகம் பெரிய அளவிலான தனித்தமிழ் மாநாடுகளை மூன்றாண்டுகட்கு ஒருமுறை நிகழ்த்தி வந்தது. மாநாட்டையொட்டிப் பேரணியும் மலர் வெளியீடும் நிகழ்வதும் வழக்கம். புதுவைச் சிவன் கோயிலில் இன்றளவும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள அரிய இசைக்கருவியான பெரும் பேரிகை ஒன்றைக் கேட்டுப்பெற்று, அதை வண்டியில் ஏற்றி வைத்துப் பேரணியின் முன் முழக்கி வருவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் நினைவிலுள்ளன. இக்கழகம் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் பாவாணர் பெயரில் அறக்கட்டளை ஒன்றை நிறுவி, (இதுவே, அந்நிறுவனத்தில் நிறுவப்பட்ட முதல் அறக்கட்டளையுமாகும்) ஆண்டுதோறும் பாவாணர் நூற்கருத்துகள் பற்றிய பயிலரங்குகளையும் கருத்தரங்குகளையும் தொடர்ந்து நடத்திவந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று கொழுத்த இராகு காலம் என்று சொல்லப்படும் மாலை 4:30 – 6.00 மணி அளவில் தோழர் ஆனைமுத்து அவர்களின் மகளை அவர் மணம்புரிந்து கொண்டது, அக்காலத்தைய பேசுபொருளாக இருந்து கவனத்தை ஈர்த்தது. இவற்றுக்கெல்லாம் காரணியான அரிமாப்பாண்டியன் ‘தமிழருவி’ எனும் பெயரில் தனித்தமிழ் இதழொன்றையும் வெளியிட்டு வந்தார். தமிழ்வழிக் கல்விக்கென அரசையே எதிர்பார்த்திராமல் நம்முடைய செயலறிவையும் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழ்வழித் தொடக்கப்பள்ளி ஒன்றையும் தொடங்கி நடத்தினார். பேராசிரியர் ம.இலெ. தங்கப்பா அவர்களைத் தலைவராகவும் என்னைச் செயலாளராகவும் கொண்ட செந்தமிழ் அறக்கட்டளையின் பொருளாளராகப் பணியாற்றினார். அந்த அறக்கட்டளை தமிழ்வழிப்பள்ளி ஒன்றை அமைத்திடும் நோக்கத்தோடு நிறுவப்பட்டதாகும். அப்பள்ளி அமைந்திட ஏறத்தாழ 12000 சதுர அடிகள் கொண்ட இடத்தினை நன்கொடையாகப் பெற்றிட அவர் கடும் முயற்சிகளை மேற்கொண்டார். புதுச்சேரி மாநிலத் திராவிடர் கழகத்

தலைவராக இருந்து மறைந்த திரு. ந.சாமிநாதன் அவர்களின் மூத்த மகனான திரு. சா.நெடுஞ்செழியன் அவர்களிடமிருந்து இந்த இடத்தை அறக்கட்டளையின் உறுப்பினரும் அவருடைய கெழுதகை நன்பருமான திரு. மு. திருநாவுக்கரசு (தேசிகன்) அவர்களின் துணையோடு பெற்றுத் தந்தார். இதற்கு நன்றிக்கடனாக அத் தமிழ்வழிப் பள்ளிக்குப் பெரியவர் ந. சாமிநாதன் நினைவுப்பள்ளி என்ற பெயரினையும் அவரே சூட்டினார். அவர் தன்னுடைய மேடைப்பேச்சின்போது அடிக்கடி உணர்வின் வயப்பட்டு விடுவார். சினத்தைக் காட்டுவார். சிலபோது அழுவதும் உண்டு. எழுத்தைப் பொருத்தமட்டில் அவருடைய நடை கடுநடையாக இருக்கும். அவரின் சொற்றொடர் ஒவ்வொன்றும் பின்னிப்பிணைந்து கிடந்து படிப்போரை மிரள வைக்கும். இயல்பாகப் படிப்போர்கூட அவரின் கையெழுத்தைப் படிக்கும்போது மெல்லவே படிக்க நேரிடும். பாவலரேறுஐயா அவர்களின் எழுத்துநடை கடினமானதாக இருப்பதாகவும் அவர் அதை எளிமையாக்கினால், தங்களுக்குப் பயன்தரும் என்று கருதிய அன்பர் சிலர் ஐயா அவர்களிடம் இதுபற்றிப் பேசுமாறு என்னைத் தூதனுப்பினர். இதை ஐயா அவர்களிடம் கூறிய போது, "தம்பி! என்னுடைய நிலைக்கு நீங்கள் உயர்ந்து வந்து என்னுடைய எழுத்தைப் படிக்கவேண்டுமே தவிர, உங்களின் நிலைக்கு என்னைக் கீழறங்கி வரச்சொல்வது சரியாகாதே!" என்று கூறினார். அரிமாவின் எழுத்தைப் படிக்கும் போதெல்லாம் இந்நிகழ்வு என் நினைவில் நிழலாடும்.

அரிமாவின் நண்பர் குழாம் மிகப்பெரியது. அதில் பெரும்பாலும் ஆசிரியர்களே நிறைந்திருந்தனர். புதுச்சேரி நேரு வீதியிலுள்ள இந்தியன் குளம்பியகம் அவர்கள் ஒன்றுகூடி அளவளாவும் இடமாக இருந்தது. வேலை நாட்களில் மாலையிலும் விடுமுறை நாட்களில் காலையும் மாலையும் இவர்கள் அங்கு ஒன்று சேர்வர். அங்கு INDIAN COFFEE HOUSE என்றிருந்த ஆங்கிலப் பெயர்ப்பலகையில் இந்தியன் குளம்பியகம் என்ற தமிழ்ப்பெயரை இடம்பெறச் செய்ததில் அரிமாவும் அவர்தம் நண்பர் குழாமும் பெரிதும் முயன்று வென்றனர். இரவு 8:30 மணிக்கு கடை மூடப்பட்டவுடன் கடற்கரையின் நகராட்சிக் கட்டடத்துக்கு அருகிலுள்ள இருக்கையொன்றில் அவர்தம் கூடுகை நடைபெறும். இந்த நண்பர் குழாம் அரிமாவின் அனைத்துத் தமிழ்ப் பணிகளிலும் அவருடன் ஒன்றி

ஒத்துழைத்தனர் என்பது பெரிதும் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியதாகும்.

அரிமாவின் அன்புப் பிடியில் அகப்படாதார் எவரும் இருக்க இயலாது. அவருக்கே உரிய தனிச்சிரிப்புடன், எவருடனும் இனிய சொல்கொண்டு உரையாடுவார். அன்பைப் பொழிவார். இவ்வாறே அவர்மீது அன்பு கொண்டோரும் பலராக இருந்தனர்.

" ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல" என்பார் திருவள்ளுவப் பெருமான். அவ்வாறு, தமிழுக்குப் பலகோடிச் செயற்பாடுகள் நிகழ்த்தப்படவேண்டுமென கருதிக்கிடந்த அரிமா, உடலின் ஒத்துழைப்பை இழந்ததால் முடங்கிப்போனார். ஆயினும், நேரிடச் சந்திக்கும்போதும், தொலைபேசி உரையாடல்களின் போதும் தமிழ் பற்றிய அவரின் எதிர்பார்ப்புகளைச் சொல்லிக்கொண்டேயிருப்பார். உங்களிடம் நான் நிறையப் பேசவேண்டும். நாம் நிறையச் செய்தாக வேண்டும் என்று கூறிக்கொண்டேயிருப்பார். என்ன செய்ய? காலத்தின் கட்டாயத்தை எவரே மாற்ற இயலும்.

---

# தமிழே மூச்சாகத் தொண்டாற்றியவர்

**– ஓவியம் தமிழ்ச்செல்வி**

அரிமாப்பாண்டியன் ஐயா அவர்களை நான் முதன் முதலில் 2000–ஆம் ஆண்டில் இரமணபுரத்தில், அவர் குடியிருந்த வீட்டில்தான் சந்தித்தேன். பார்வைக்கு எளிமையானவராக, நன்கு பழகும் பண்பாளராகவும் இருந்தார். நான் அப்போது இளங்கலை – குமுகவியல் படித்துக்கொண்டிருந்தேன். அதில் பெரியார் பற்றிய சில பாடங்கள் இருந்தன. அவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், பெரியாரின் சில நூல்களுக்காகவும் அவர் வீட்டுக்குச் சென்றேன். அவர், அன்புடன் என்னை வரவேற்று பெரியார்பற்றி பல செய்திகளைக் கூறினார். பெரியாரின் நூல்கள் சிலவற்றையும் கொடுத்தனுப்பினார். அவை என்படிப்புக்குப் பெரும்பயனாக அமைந்தன.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது அவர் குடும்பம் இருக்கும் இராதாகிருட்டினன் நகர் வீட்டின் எதிர் வீட்டிலேயே

நாங்களும் வாழும் பெரும்பேறு பெற்றோம். எங்கள் வீடு கட்டும் சமையத்தில், தமிழன்பர் குணத்தொகையன்ஐயா அவர்களும், அரிமாஐயா அவர்களும் செய்த உதவிகள் சொல்லிமாளா. காலப்போக்கில் நெருங்கிய உறவினர்கள் ஆனார்கள். உணவுப்பொருள்கள் பரிமாறிக் கொள்வது, இருவீட்டுப் பிள்ளைகளும் கலந்து ஒன்றாக விளையாடுவது, எனக்கு நல்லது சொல்வது– செய்வது என, தந்தை இடத்தில் அவரை வைத்து மகிழ்ந்தேன். எங்கள் குடும்ப நிகழ்வுகளுக்கு அவரைத்தான் குடும்பப் பெரியவராக முன்னிலைப்படுத்துவோம். என் மகன் சாந்தன் திருமணத்தைக்கூட அவர்தான் நடத்தி வைத்தார். என் இணையர் ஓவியர் அன்பழகனின் மாணவி பூரணியின் திருமணத்தைச் செம்படுகை நன்னீரகம் இராமமூர்த்தி அவர்களின் உதவியுடன், ஐயாவை முன்னிறுத்தி திருமணம் செய்து வைத்தோம். சீர்வரிசைகளை அரிமா ஐயா–அவரின் துணைவியார் தமிழ்ச்செல்வி ஆகியோரின் கையாலேயே கொடுத்தோம். பார்ப்பதற்குப் பெருமீசையுடன், கடுமையானவர் போல் தோற்றமளித்தாலும், பழகினால் எளிதில் உணர்ச்சிவயக்கூடியவர் என்றும், சில நேரங்களில் கண்கலங்கி விடும் குழந்தை உணர்வு கொண்டவர் என்பதும் விளங்கும்.

சென்ற ஆண்டு நவம்பர் திங்கள் எங்கள் திருமண நாளன்று நானும் ஓவியரும், ஐயா – அவர்களின் துணைவியாரின் காலில் விழுந்து வாழ்த்து பெற்றோம். நாங்கள் காலில் விழக் கடுமையாக மறுத்தார். நாங்கள் வலுக்கட்டாயமாக விழுந்து வாழ்த்து பெற்றோம். அப்போது ஓவியருக்கு உருவா நூறு எனக்கு உருவா நூறு பணம் வைத்துக் கொடுத்தார். அவர் நினைவாக அந்தப் பணத்தை இன்றும் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம். அவரின் இழப்பு எங்கள் குடும்பத்திற்கும் பேரிழப்புதான். என் தந்தையின் இழப்பாக எண்ணி சொல்லொண்ணாத் துயரில் வருந்துகிறேன். ஐயா அவர்கள் தமிழே மூச்சாகத் தொண்டாற்றியவர். அவர் வழியில் நாம் அனைவரும் இணைந்து செயலாற்றுவது அவருக்கு நாம் செய்யும் நினைவுத் தொண்டாகும்.

# தகைசால் போராளி சீனு. அரிமாப்பாண்டியன்

**– சீனு. தமிழ்மணி**

தன் வாழ்நாளெல்லாம் தமிழ் தமிழினம் தமிழ்நாடு எனப் பேசியும் போராடியும் வந்த தனித்தமிழ்க்கழகத்தின் தலைசிறந்த தலைவரும் தொண்டரும், தந்தை பெரியாரால் அறிஞர் எனப் போற்றப்பட்ட வடநாட்டு மக்களுக்கும் புதுச்சேரி மக்களுக்கும் இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த ஐயா வே.ஆனைமுத்து அவர்களின் மருகரும், பணிநிறைவு பெற்ற முன்னாள் தலைமை ஆசிரியருமான அண்ணன் சீனு.அரிமாப்பாண்டியன் அவர்கள் உலகத் தொழிலாளர் நாளான மே 1 2026 வெள்ளிக்கிழமை அன்று விடியற்காலை 4 மணி அளவில் சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் இயற்கை எய்தினார்.

தொடக்கக் காலத்தில் – ஏறக்குறைய – 60 ஆண்டுகளுக்கு முன் சிம்மக்குரலோன் சிவாஜி கணேசன் சுவைஞர் மன்றம், பாவேந்தர் கபடிக்கழகம், பெருந்தலைவர் காமராசர்பால் பேரன்பு கொண்டு பேராயக்கட்சி என ஈடுபாடு கொண்டிருந்த அவர் பின்னாளில் பெரியார் சிந்தனையாளராகவும் தனித்தமிழ்ச்சிந்தனையாளராகவும் மாறினார். தி.பி. 2009 சுறவம் 12ஆம் (25.01.1978) நாள் தொடங்கப்பட்ட தனித்தமிழ்க்கழகத்தின் ஆற்றல்மிகு செயல் வீரர் இவர். நான்கு மிகச் சிறந்த தனித்தமிழ் மாநாடுகள் நடத்தத் துணையாக இருந்தவர் இவர். அம் மாநாடுகள் முறையே தி.பி.2015 மேழம் 2,3(14,15.04.1984); தி.பி.2021 நளி 15,16(1,2.12.1990); தி.பி. 2026 சிலை 1,2 (16,17.12.1995) தி.பி.2023 கும்பம் 4,5 (16,17.02.2002) ஆகிய காலங்களில் சிறப்பாக இவரின் ஒத்துழைப்பால் நடந்தேறின. நான்காம் தனித்தமிழ் மாநாடு பாவாணர் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. இந்த நான்கு மாநாடுகளும் புதுச்சேரி கம்பன் கலையரங்கில் நடந்தன. ஒவ்வொரு மாநாட்டின் போதும் சங்கொலி முழங்க – யானை நடையிட– பறை அதிர – கரகாட்டம் – பொய்க்கால் குதிரை ஆட்டங்களுடன் – உடுக்கை – மேள நாகசுர இசையைத் தொடர்ந்து, மழலையர்– மாணவர்– மகளிர்– அறிஞர்– இளைஞர்– பெரியோர் பின் தொடர, கழகக் கொள்கை – கோரிக்கைகள் உரக்க முழங்க ஊர்வலம் நடைபெறும்.

இசையரங்கம், பாட்டரங்கம், நூல் வெளியீட்டரங்கம், உரையரங்கம், நாட்டுப்புறப் பாட்டரங்கம் எனப் பல்வேறு நிகழ்வுகள் நிகழ்த்தப்படும். இந்த மாநாட்டு நிகழ்வில் பாவலரேறு பெருஞ்சித்தி ரனார், மொழியறிஞர் ப.அருளி, புலவர்இறைக்குருவனார், தாமரை பெருஞ்சித்திரனார், முனைவர் இரா. திருமுருகனார்,அறிஞர் ம.இலெ.தங்கப்பா, பெரியாரியல் பேரறிஞர் வே.ஆனைமுத்து, முனைவர் இரா.இளவரசு, பல்லடம் மாணிக்கம், புலவர் மு.இறை விழியனார்,நயனரசர் தாவீது அன்னுசாமி, இசையறிஞர் வீ.பா.க. சுந்தரம், முனைவர் சா.மெய்யப்பன் எனப் பல அறிஞர் பெருமக்களும் புதுவை முதலமைச்சர் ந. அரங்கசாமி அவர்களும் மற்றும் பல அமைச்சர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிப்பர். இவை அனைத்திற்கும் மூல காரணகராக சீனு.அரிமாப்பாண்டியன் இருப்பார். 1984 ஆம் ஆண்டு புதுச்சேரித் துணைநிலை ஆளுநர் புதுச்சேரி பொறியியல் கல்லூரிக்குப் பாவேந்தர் பாரதிதாசன் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்த அறிவிப்பை அரசு நடைமுறைப்படுத்த வேண்டிப் பல்வேறு நிலைகளில் போராடி அதற்கு வேறு பெயர் வைக்கும் முயற்சிகளைக் கண்டித்துக் கைவிடச்செய்தது தனித்தமிழ்க்கழகமே. இப்போது அது பொறியியல் பல்கலைக்கழகமாக வளர்ந்த நிலையில் புதுச்சேரிப் பொறியியல் பல்கலைக்கழகம் என்று இருப்பதைப் பாவேந்தர் பொறியியல் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றப்பெறப்போராட வேண்டும் என்ற தன் வேணவாவை அவர் என்னிடம் தெரிவித்திருந்தார். புதுச்சேரியில் கிட்டத்தட்ட தமிழுக்காக நடந்த பல்வேறு போராட்டங்களில் 40 ஆண்டுகளுக்கு மேல் கலந்து கொண்ட போராளி அவர்.

இவருக்குத் துணையாக இருந்தவர்கள் பெ. தமிழ்நாவன், சபா.குப்புசாமி, த.மன்றவாணன், வே.ஆறுமுகம், சி.தமிழ்மாறன், வழக்கறிஞர் முத்துசேரன், மு.தேசிகன், தாமரைக்கோ, க.குணத்தொகையன், புதுவைத்தமிழ்நெஞ்சன், சீனு.தமிழ்மணி, அரச.மணிமாறன் எனப் பலர் அடங்குவர். அவர் குறித்து நிறைய எழுத வேண்டியிருக்கிறது. இப்போதைக்கு இது போதும்.

தகைசால் போராளி சீனு.அரிமாப்பாண்டியன் இறப்பு பேரிழப்பு. அவர் புகழ் ஓங்குக!

# அரிமாஐயாவின் இறப்பு பேரிழப்பு!

**– ஓவியர் அன்பழகன்**

தமிழ்த்திரு அரிமாஐயா அவர்களுடனான முதல் தொடர்பு, கொள்கை அடிப்படையிலானது. நாளடைவில் அன்பின் அடிப்படையிலான உறவாக மாறியது. 90–களில் மொழிஆய்வாளர் செந்தமிழ்த்திரு. அருளிஐயாவின், திங்கள் ஒருமுறை நடந்த ஆய்வரங்கம், அப்போது இரமணபுரத்தில் குடியிருந்த அரிமாஐயா வீட்டில் நடக்கும். மேட்டுப்பாளையத்தில் குடியிருந்த நான் அருளிஐயாவின் பேச்சுகளில் ஈர்க்கப்பட்டிருந்ததால் ஐயாவின் வீட்டுக்கு அந்நிகழ்விற்கு வருவேன். அப்போதிலிருந்தே அரிமாஐயாவின் அறிமுகம் கிடைத்திருப்பினும் நெருக்கம் இல்லாமல்தான் இருந்தது.

ஒருமுறை பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயாவின் இறப்பிற்குப் பிறகு அவரின் உருவத்தை ஓவியமாக வரைய வேண்டும் என்று, நான் பணிபுரிந்து கொண்டிருக்கும் பள்ளிக்கு நேரில் வந்து என்னைச் சந்தித்து வரைந்துகொடுங்கள் என்றார். நான் வரைய ஒப்புக்கொண்டேன். ஆனால் பணம் வாங்கமாட்டேன் என்றேன். அவரும் "நீங்கள் கேட்டாலும் நாங்கள் தரமாட்டோம்" என்றார் . அன்றிலிருந்து எனக்கு அவர்பாலும் அவருக்கு என்பாலும் அன்பான தொடர்பு உண்டாயிற்று. 2000ஆம் ஆண்டில் எதிர்பாராத விதமாக இராதாகிருட்டினன் நகரில் அவர் வீட்டின் எதிரிலேயே எங்கள் வீடும் அமைந்தது. எனக்குப் பெரு மகிழ்ச்சியும், பாதுகாப்புணர்வும் ஏற்பட்டன. தமிழ்–தமிழர் தொடர்பான அவரின் செயற்பாடுகளுடன் நாங்களும் இணைந்து கொண்டோம். பல நிகழ்வுகளில், அவர்களுடன் இணைந்து செயலாற்றிக்கொண்டிருக்கும்போது கம்பன் கலையரங்கத்தில் நடந்த பாவாணர் நூற்றாண்டு விழா– நான்காம் தனித்தமிழ் மாநாட்டுக்கு மேடை பின்புலம் வரைய எனக்கு வாய்ப்பளித்தார். அவர் நடத்திய "தமிழருவி" இதழுக்கு அவ்வப்போது அட்டைப்படம் வரையும் பணியும் எனக்குப் பணித்தார்.

ஒவ்வோர் ஆண்டும் நாங்கள் கொண்டாடும் ஒரே விழாவான பொங்கல் விழாவை இரு குடும்பமும் இணைந்தே கொண்டாடி

வந்தோம். அந்தப் பொங்கல் விழாவுக்குப் புதுவையில் உள்ள பெரும்பாலும் தமிழ் அன்பர்கள், செய்தியாளர்கள், ஓவியர்கள் வீட்டுக்கு வருவார்கள். 50க்கும் மேற்பட்ட அன்பர்களுக்கு உணவளித்து, பொங்கல், பொங்கல் பரிசும் கொடுத்துஅனுப்புவது இன்றுவரை வழக்கம். இப்படியாக அவரின் வீட்டு எதிரில் குடிவந்து 26 ஆண்டுக்காலம் அவருடனான குடும்ப உறவுகளுடன் கூடிய செயற்பாடுகள் பேராளம். என்மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். என்னை "நீ என் மூத்த பிள்ளை" என்று அடிக்கடி சொல்வார். என் மகனின் சீர்திருத்தத் திருமணத்தை ஐயா சிறப்பாகச் செய்துகொடுத்தார். நான் சார்ந்திருக்கும் செம்படுகை நன்னீரகத் தோழர்களிடம் பேரன்பு கொண்டிருந்தார். செம்படுகைத் தோழர்களும் ஐயாவின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். ஆரோவில் பகுதியில் வசிக்கும் பாலு–இராசவேணி இணையர் திருமணத்தையும் ஐயா அவர்கள் நடத்திக் கொடுத்தார். இப்போது அவர்கள் சமரன் என்கிற மகனுடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு திங்களும் பதினொன்றாம் நாள் புதுவைப் பேருந்துநிலையத்தில், திருவள்ளுவர் மன்றத்தின் பெருமுயற்சியில் அமையப்பெற்ற, திருவள்ளுவர் சிலைக்கு மாலை போட்டு குறள் சொல்லும் நிகழ்வுக்குச் செல்வோம். பெரும்பாலும் தமிழ்ச்செல்வன் அவர்களுடன் செல்வார். சிலவேளைகளில் அவர் இயலாத வேளையில் என்னுடன் வருவார். அப்படிப் போகும்போதும் வரும்போதும் அரசியல் – குடும்பம்– தமிழ் –தமிழர் தொடர்பான– பல செய்திகளைப் பேசுவோம். தன்னுடைய மனஆற்றாமையை வெளிப்படுத்துவார். உடன்இருப்பவர் யாரையும் குறைசொல்லிக் கேட்டதில்லை. அனைவரையும் பெருமையாகத்தான் சொல்லிக்கேட்டிருக்கிறேன். மீசை முறுக்கி, முரட்டுத் தோற்றமாக இருந்தாலும் மிக அன்பானவர். இப்படியாக அவருடனான பல செய்திகள் உண்டு.

ஐயாவின் இறப்பு பேரிழப்பு. அவரின் எண்ணங்களைத் தமிழ் நண்பர்கள் அனைவரும் இணைந்து செயற்படுத்துவதே ஐயாவின் மறைவுக்கு நாம் செய்யும் ஈடாகும்.

# செந்தமிழ்ச்செம்மல் தமிழ்ப்போராளி அரிமாப்பாண்டியனாரின் தொண்டினை நெஞ்சிலேந்துவோம்!

**– மு. பச்சையப்பன்**

இவ்வுலகில் ஓரறிவு உயிரிகள் முதல் ஆறறிவு உயிரிகள் வரை உயிர்க்கின்றன. ஓரறிவு உயிரிகள் முதல் ஐந்தறிவு உயிரிகள் வரை இல்லாத சிறப்பு முதுகின் மேல் உறங்கும் நிலையும், எந்த ஒன்றையும் ஓர்ந்தெண்ணிப் பகுத்தறியும் உணர்வினையும் பேசும் திறனையும் பெற்றவனே மாந்தன்.

பல இலக்கக்கணக்கானோர் மாந்தராய் பிறக்கின்றனர்; வளர்கின்றனர். அவர்களுள் இலக்கத்தில் ஒருவரே, தன்னைப்போல் வாழும் உயிரிகளையும் (மாந்தன்) தனக்கு உயிரை – உணவையளிக்கும் (அஃறிணை) உயிரிகளையும் அவர்கள் படும் இன்னல், அல்லல், இழிவு, தாழ்வு, எள்ளல், ஏசல் இவற்றைக் கண்டு அவ் உயிர்கள் வாழ பல இன்னலுக்கிடையிலும் உதவுவார். தன்னையும் தன் உயிரையும் அளித்து உயிர்களின் வாழ்வுயர நாடு, மொழி, பண்பாடு, கலை உயரப் பாடுபடுபவர் இயற்கையில் கலந்தாலும் நாளும் புகழாய் வாழ்வார்!

நினைவு என்பதென்ன? அவரவர் வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளே நினைவாய் மலரும் என்பார் தமிழூர் அறிஞர்.

மனம் என்பதென்ன? மனம் என்பது - எண்ணம், உணர்வு, விருப்பம், நினைவாற்றல் அவற்றின் தொகுப்பாகி மூளையில் – சிந்தையில் எழும் ஒரு நன்மையான தொட்டுணர இயலா நிலையிலிருந்து அனைவரும் அறியும்படி சொல்லாய், செயலாய் வெளிப்படுவதே மனம் என்பார் அறிவோர்.

செந்தமிழ்ச்செம்மல் தமிழ்ப் போராளி ஐயா **சீனு. அரிமாப்பாண்டியனார்** அவர்கள் தமிழ் எம்முயிர், உடலம், எண்ணம், செயல் இயற்கையெனச் செப்பிய **பாவேந்தர், பாவலரேறு** வழியில் நின்றவர்! தமிழ் வாழ இனம் வாழும் எனப் பகர்ந்த **பாவாணர்** நெறியை ஏற்றவர்! பகுத்தறிவே உயர் வாழ்க்கை என்ற பகுத்தறிவுப் பகலவர்

**தந்தை பெரியார்** *கொள்கையில் வாழ்ந்தவர்! இக் கொள்கைகளே அவர் வாழ்வில் மலர்ந்து மணம் வீசின!*

*ஐயா அரிமா அவர்கள் அன்பானவர். அன்பென்பது – அனைத்து உயிரிகளுக்கும் செலுத்தும் பொதுவாய் பெற்ற தூயவுணர்வே என்பார் "யா" அறிஞர்.*

*ஒரு நிகழ்வு : தமிழன்பு உள்ளங்களொடு செம்புலநீர்போல் கலந்த நான் புதுவை தருமபுரியில் ஒரு சின்னஞ்சிறிய இல்லத்தைக் கட்டினேன். அதற்குப் புதுமனை புகுவிழா, பார்ப்பனியம் தவிர்த்து தமிழிலேயே நடத்த விழைந்தேன். இதனால் உறவுகளிடம் பல எதிர்ப்பையும் வெறுப்பையும் பெற்றேன். யாரை அழைக்கலாம் என எண்ணமோடியது. தமிழூர் ஐயாவிடம் கேட்டேன். பணியுள்ளது, என்றார். அவருக்குத் தொல்லையாக இருக்கக்கூடாது என நீங்கி ஒருநாள், இரு நாள் ஓடியது.*

*"தூய மனத்தவர் துவளாச் செயலவர்*
*உயர்ந்த அகத்துள் தாய்மை நிறைந்தவர்*
*நேயமோடு நன்பழகும் பண்பவர்*

*நெகிழாக் கொள்கை தமிழாய் வாழ்ந்தவர்" – தமிழ்ப் போராளி சீனு. அரிமா அவர்களைக் காணச் சென்றேன். குறளன்போடு, வாங்க பச்சையப்பன் என்றார். அவர் ஏழைப் பணக்காரர் இவரால் என்ன விளையுமென்று எண்ணாது தமிழ் மனத்தவரை உயரவைத்து ஊக்கப்படுத்தும் எண்ணம் பெற்றவர். நான் பழகிய உண்மை, நேர்மை, வாய்மையமருள் இவரும் ஒருவர்!*

*அரிமா ஐயாவிடம் செய்தியைப் பகர்ந்தேன். ஐயாஆனைமுத்து புதுவைக்கு வருகிறார், அன்று உங்கள் இல்லத் திறப்புவிழா செய்யலாமென்றார். என் மனம் மகிழ்வில் திளைத்தது! அவர் சொன்னபடியே நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.*

*இன்று அவரின் தூயபண்பை, நல்லெண்ணத்தை, மானவுணர்வை, நெகிழாக் கொள்கைப் பிடிப்பையெண்ணி அவர் போல் நாமும் வாழ விழைகின்றேன்.*

*அவர் நினைவில் வாழும் அன்பன்.*

*****



புதுவைத் திருவள்ளுவர் மன்றம் நிறுவிய திருவள்ளுவர் சிலைக்குத் திங்கள் தோறும் மாலை அணிவிக்கும் நிகழ்வில் திருவள்ளுவர் மன்றத்தின் செயல் தலைவர் புலவர் செ. இராமலிங்கன்ஜயா அவர்களுடன், அண்மையில் மறைந்த செந்தமிழ்ச்செம்மல் தமிழினப்போராளி தனித்தமிழ்க் கழகத்தின் செயலர் சீனு. அரிமாப்பாண்டியனாரும், தமிழன்பர்களும்.

(கோப்புப் படம்)